118

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

திருவெவ்வுளூர்

ஸ்ரீ வீரராகவ மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 44.

சங்கக் காரியாலயம்:

ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

O22:417.2112
.TV
N53.
113150.

28-2-1953.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
1.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.	ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
2.	தேசிகர் நூற்றந்தாதி. (42)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
3.	மறைமுடித் தேசிகனுர்.	ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள்.
4.	மணவாள மாமுனிகள்.	ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள்.
6.	வேதாந்த தேசிக ரூசல்.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
9.	கம்பர் மாலை.	ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலை.	ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள்.
13.	திருவருண் மாலை. (38)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34)	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
17.	புகழ் மாலை.	தமிழன்பர்.
18.	கம்பர் தருங் கண்ணன்.	ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள்.
19.	முக்கோற்பகவர்.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள்.
20.	ஸ்ரீ வீரராகவ மாலை.	ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
21.	திருமாமகள் மாலை.	திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்.
22.	திருநரசிங்கர் மாலை.	ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
23.	அழகியசிங்கர் மாலை.	ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
24.	பொய்கையார் மாலை.	ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள்.
25.	ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை.	சிறந்த தேசிக பக்தர்.
26.	வாரணமாயிரமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
27.	ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்த ராஜய்யங்கார் அவர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:



திருவெவ்வுளூர்

ஸ்ரீ வீரராகவ மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-44.

இது

ஸர்வமங்கள நந்தனவாண்டு கும்பத் திங்கள் பதினேழாம் நன்னாள் ஸ்திரவாரம் மாசி மகத்தன்று சென்னை புதுப்பாக்கம் பைக்ராப்ட்ஸ் ரோடு 283–84 இலக்கங்களுள்ள திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரராகவப் பெருமாள் திருமுன்பு வழங்கிய

சந்தமிகு செந்தமிழ்மாலை.

தேசொத் தாரில்லை யெனுந்தெய்வ நாயகனார்
வாசக் குழன்மா மலராண் மணவாளர்
வாசித் தொழுமன் மதனார் மணற்றேப்பின்
மாசிக் கடலாடி மகிழ்ந்து வருவாரே.

—(தேசிகமாலை, நவமணிமாலை 4.)

O22:417. 2112.T N53

28–2–1953.

முதற் பதிப்பு—1953

Kabeer Printing Works, Madras (2157)

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 1.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஸ்ரீ வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்மியம். ... 12.

திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம். ... 32.
(குறிப்புரையுடன்)

திருமழிசை வந்த சோதிமங்களாசாஸநம். ... 37.
(குறிப்புரையுடன்)

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. ... 38.

ஸ்ரீ வீரராகவ ஸுப்ரபாதம். ... 39.

கிங்க்ருஹேசஸ்துதி. ... 43.

ரகுவீரகத்யம். ... 47.

ஸ்ரீ:

முகவுரை.

மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ
மகரம்சேர் குழைஇருபாடு இலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலேயே துணையா இங்கே
இருவராய் வந்தார்என் முன்னே நின்றார்
கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டும் தோழீ !
அவரைநாம் தேவரென்று அஞ்சி னேமே.

—(திருமங்கையாழ்வார். திருநெடுந்தாண்டகம். 21)

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத் தின்வைப் பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோறுறந்து
கானுங் கடலுங் காத்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேந்தை.

—(இராமாவதாரம். அயோத்தியாகாண்டம். காப்பு.)

சோகந் தவிர்க்குஞ் சுருதிப் பொருளொன்று சொல்லுகின்றோம்
நாகந் தனக்குமி ராக்கதர்க் குந்நமக் குஞ்சரணு
மாகண் டலன்மக னாகிய வாவலிப் பேறியவோர்
காகம் பிழைத்திடக் கண்ணழி வேசெய்த காகுத்தனே.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 15)

ஒருக்காலே சரணாக வடைகின் றார்க்கு
முனக்கடிமை யாகின்றே னென்கின் றார்க்கு
மருக்காதே யனைவர்க்கு மனைவ ராலு
மஞ்சேலென் றருள்கொடுப்ப னிதுதா னேது
மிருக்காலு மெழின்முனிவர் நினைவி னாலு
மிவையறிவார் செயலுடனென் னிசைவி னாலும்
நெருக்காத நீள்விரத மெனக்கொன் றென்னு
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலைபெற் றோமே.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 16)

பொன்னை யிகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தான்
மன்ன ரெடுப்பதப் பொன்னல தேமன் னுலகனைத்துந்
தன்னை யடைந்திடத் தானருள் செய்யுந் தனிச்சிலையோன்
பொன்னடி நாமடைந் தோம்புற மாதிரன்கொல் செய்திடினே.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 17)

வேதத் திரளின் விதியுணர்ந் தோர்கள் விரித்துரைத்த
காதற் கதியையு ஞானத்தை யுங்கரு மங்களையுஞ்
சாதிக்க வல்ல சரணு கதிதனி நின்ற நிலை
யோதத் தொடங்கு மெழுத்தின் றிறத்தி லுணர்மின்களே.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 18)

மூவுலகுந் தன்பிழையைத் தானே சாற்ற
முனிவர்களுந் தேவர்களு முனிந்த வந்நாட்
டாவரிதா யெங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த
தனிக்காகந் தானிரந்த வுயிர்வ ழங்கிக்
காவலினி யெமக்கெங்குங் கடனென் றெண்ணிக்
காண நிலை யிலச்சினையன் றிட்ட வள்ள
லேவல்பய னிரக்கமிதற் காறென் ருேது
மெழிலுடையா ரிணையடிக்கீ ழிருப்போ நாமே.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 19)

ஸ்ரீய: பதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதனுய், அவாப்த ஸமஸ்த காமனுய், அநந்த கல்யாண குணகண மஹோததியான ஸ்ரீமந் நாராயணன் தனது பரமக்ருபையாலே சேதனுேஜ் ஜீவனுர்த்தம் இவ்விருள்தருமா ஞாலத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளி யிருக்கும் ஸ்தலங்கள் பலவுள. அவற்றுள் மாலுகந்தவாசிரியரும், மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்களும் ஆகிய ஆழ்வார்களின் மங்களாசாஸனம் வாய்ந்த திருப்பதிகள் திருவரங்கம் முதல் திருநாடு அளவும் நூற்றெட்டாம். அவற்றுள் சான்ருே ருடைத்தான தொண்டை நன்னுட்டுத் திருப்பதிகள் இருபத் திரண்டு. திருமால் சாலிஹோத்திர மஹரிஷிக்கு ப்ரதியக்ஷமாகி ‘உறைதற்கு உரிய உள் எவ்வுள்?’ என வினவியதனுல் ‘திருவெவ்வுளூர்’ என்று திருநாமம் பெற்ற திருப்பதி இவ்விரு பதினென்றில் ஒன்று. எம்பெருமான் திருநாமம் வீரராகவப்

பெருமாள் ; தாயார் கநகவல்லி ; விமாநம் விஜயகோடி ; தீர்த்தம் ஹ்ருத்தாபநாசனம் ; கிழக்கே திருமுக மண்டலம் ; புஜங்க சயநம் ; வீக்ஷாரண்யம் ; மக்ஷிகாரண்யம். திருமங்கையாழ்வார், திரு மழிசையாழ்வார் மங்களாசாஸநம் பெற்ற திருத்தலமிது. வினை தீர்க்கும் வீரராகவன் என்று உலகப் பிரஸித்தி.

இத்திருப்பதி விஷயமான ஆழ்வார் பாசுரங்களையும், பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த திவ்ய ப்ரபந்த பாசுரப்படி ராமாயணத்தையும், நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதிப் பாடலையும், சக்ரவர்த்தித் திருமகன் விஷயமாகப் பழந் தமிழ் நூல்கள், வள்ளலரர் பாக்கள், தேசிகமாலை இவற்றின் ஆய்ந்தெடுத்த கலம்பகத்தையும் சேர்த்துத் தொடுத்த "வீரராகவ மாலை" இத்தமிழ்ச் சங்கத்தின் இருபதாவது வெளியீடு. (8-6-1949.)

" ' ப்ரமாணஞ்ச ப்ரமேயஞ்ச ப்ரமாதாரச்ச ஸாத்விகா:, ஜயந்து க்ஷபிதாரிஷ்டம் ஸஹ ஸர்வத்ர ஸர்வதா. '

நாதோபஜ்ஞமான நமது ஸித்தாந்தத்தில் ப்ரமாணவ்யவஸ்தைதையில் சப்தப்ரமாணத்தில் ச்ருதிமூலமான ஸ்ம்ருதி பேதத்தில் புராணங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஸாத்விக ராஜஸதாமஸ பேதேந பிரிக்கப்பட்டும், அவற்றுள் ஸாத்விக புராணங்கள் உபாதேயதமங்களென்றும், வேதாந்தோபப்ருஹ்மணங்களென்றும் சொல்லப்பட்டும் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஸாத்விக புராணங்களுள் சிறந்ததாயிருக்கின்ற மார்க்கண்டேய புராணத்தில் க்ஷேத்ரகாண்டத்தில் நூறு அத்யாயத்திற்குமேல் பதினொன்று அத்யாயங்களால் ஸ்ரீ வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம் சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்த திவ்யக்ஷேத்ரத்திற்கு ஸ்ரீ ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்தி களில் 'திருவெவ்வுள்' என்றும், ஸ்ரீ ஆசார்யர்களுடைய வட மொழி ஸ்தோத்ரங்களில் 'ஸ்ரீ கிங்க்ருஹபுரீ' என்றும், புராணங் களில் 'ஸ்ரீ வீக்ஷாரண்யம்' என்றும், உலக நடவடிக்கையில் 'திருவெள்ளூர்' என்றும் பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அந்த திவ்யதேசத் தெம்பெருமான்தன்னை ஒருக்கால் சேவித்த மாத்திரத்திலேயே பாக்யவிசேஷத்தாலே வேதாந்தங்களினால் ஏற்படக்கூடிய பரதத்த்வ நிர்ணயம் எளிதில் ஸாமாந்ய மனித னுக்கும்கூட உண்டாகும்படியான வீறுபாட்டோடும், விபவத்தில் விச்வாமித்ர மஹர்ஷியின் பிரார்த்தனைக்கிணங்கி அவர் காட்டிய

விடத்தில் கண்வளர்ந்தருளி தத்காலத்தில் தன்வடிவழகை தந்மாத்ராநுபாவ்ய மாக்கினுப் போலில்லாமல் ஸ்ரீ சாலிஹோத்ர மஹர்ஷியின் பிரார்த்தனைக் கிணங்கி ஸதாஸர்வாநுபாவ்ய மாக்கின திருவடிவழகோடும், நின்ற திருக்கோலத்திலும் விபவத்தில் சக்கிரவர்த்தியும் பிரஜைகளும் அனுபவித்த திவ்யாவயவ சோபையோடு கூடின திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு ஸத்ருசமான திவ்யமங்கள விக்ரஹத்தோடும் கூடினவராய் சேவை சாதித்து வருகின்றார். இப்படி ஸாதாரணமாக ஸர்வருக்கும் அநுபவம் வருமானால் கேவல பகவதநுபவபரர்களுக்கு வரும் பகவதநுபவ பரீவாகம் வாசாமகோசரமாயிருக்கும். ஆனால் அவ்வநுபவ பரீவாஹமாக வெளிவரும் அவர்களுடைய சொல்லாலும் சேஷ்டிதங்களாலும் அவ்வநுபவம் பெருகிவருவதை மட்டும் நாம் அநுபவிக்கலாம்.

அப்படிப்பட்ட அநுபவம் வாய்ந்தவர்களுள் நமது ஆசார்ய ஸார்வபௌமனான ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் அநுபவமானது பெருக்கெடுத்து, அந்த எம்பெருமான் மஹிமையைச் சொல்லுகிறதாயும், அந்த க்ஷேத்திரத்திலிருக்கப்பட்ட தீர்த்தத்தின் மாகாத்ம்யத்தைச் சொல்லுகிறதாயுமுள்ள இந்தப் புராணத்தின் வ்யாக்யாந ரூபமாகப் பிரவஹித்தது. இதற்கு நாலாயிரப்படி என்று திருநாமம். தவிர அந்த எம்பெருமானிடத்தில் ஈடுபாட்டால் திருத்தேர் திருச்சிவிகை கண்ணாடித் திருப்பல்லக்கு முதலிய கைங்கர்யங்களையும் செய்யும்படி தூண்டினது. கவிதார்க்கிக சிங்கர் ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தை பண்ணும் இசையும் திகழும்படி அநுபவித்த மாதிரி நம் அழகிய சிங்கரும் ஸ்ரீவீக்ஷாரண்ய மாஹாத்ம்யத்தை வ்யாக்யாந நிர்மாண முகேந அநுபவித்தார். அத்துடன் புராணங்கள் வேதாந்தோபப்ருஹ்மணமாவது எப்படி என்பதும் விளங்குமாறு வ்யாக்யாநம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மஹாசார்யர்கள் செய்யும் ஒவ்வோர் க்ருதியிலும் எல்லா மடங்கியிருப்பது இயல்பன்றோ! சொல்லு மவிடு சுருதி என்பது இதில் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஏற்படுகிறது.

சதாசார்ய முகேந உபயவேதாந்த காலக்ஷேபம் செய்தவர்கள் இதை குருவந்தந பூர்வகமாக சேவித்தார்களே யாகில் ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுபவம் ஆழ்வாருள்ளிட்டார்களுடைய அனுபவத்திற்கு சற்றேனும் குறையாதென்றே நிச்சயிப்பார்கள். ஸ்ரீ அத்திப்

பட்டு அழகியசிங்கர் விபவத்தில் ஸ்ரீ வீரராகவனையும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் மங்களா சாஸநம் செய்யுங்காலங்களில் திருக்கச்சி நம்பி படியிலே நேரே வார்த்தையாடி 'என்ன திருவுள்ளம்? என்ன திருவுள்ளம்? என்று கேட்டு திருவுள்ள மறிந்து அந்தப்படி கைங்கரியங்கள் செய்வது வழக்கம் என்று அவ்வப்போது நிகழ்ந்த சில கதைகள் இப்போது பல பெரியோர்களால் சொல்லப்பட்டு வருகின்றன." [ஸ்ரீ வீக்ஷாரண்ய க்ஷேத்திர மாகாத்மியம். முகவுரை. *ஸ்ரீ உ. வே. தேவனுர்விளாகம் வித்வாந் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார் ஸ்வாமி. ஸ்ரீமுகவருஷம். பங்குனி மீ 28 உ. 1934.]

இங்கு போற்றப் பெற்றுள்ள ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் திருநாமம்: ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன்; 34 ஆவது பட்டம்; பூர்வாச்ரமம்: அத்திப்பட்டு மாடபூசி வித்வாந். ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி; திரு அவதாரமும் திரு நக்ஷத்திரமும்: ஸ்ரீமுக வருஷம் கார்த்திகை மாதம் உத்திராட நக்ஷத்திரம். (1813 ஹூ நவம்பர் மீ.); ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளினகாலம்: ப்ரமாதி ஹூ ஆவணி மீ 29உ கிருஷ்ண பக்ஷம் ஏகாதசி வெள்ளிக்கிழமை புஷ்ய நக்ஷத்திரம் (12–9–1879); திருநாட்டிற்கு எழுந்தருளின காலம்: சித்ரபாநு ஹூ புரட்டாசி மீ 21உ கிருஷ்ணபக்ஷம் தசமி வியாழக்கிழமை. (5-10-1882); ஆஸ்தான நிர்வாஹ காலம்: 3ஹூ 1மீ.

"திருவெவ்வுளூர்த்திரிபந்தாதி" என்பது "இராமநாதபுரம் சீமை சூரியங்கோட்டமிருந்து அரியக்குடி வந்திருக்கும் வித்துவான் வேலாமூர் கிருஷ்ணமாசாரியாரவர்கள் இயற்றியது."
(சென்னை: மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1902. பிலவ ஹூ மாசி மீ)

"ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதி முத்ரகர்த்தாவா யெழுந்தருளி

---

* இந்த மஹாநுபாவர், ஸ்ரீ அஹோபிலமடத்தின் திவ்யாஸ்தாநத்தில் 43-ஆவது பட்டத்திற்காக நியமிக்கப்பெற்று ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்ர மஹாதேசிகன் என்ற திருநாமத்துடன் விளங்கி வருகிருர் திருவெவ்வூளூரில்.

யிருந்த திருப்புல்லாணி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ஸ்வாமி நியமனத்தாலி யற்றப்பெற்று ஸ்ரீமதஹோபில மடம் 34-ஆவது பட்டம் ஸ்ரீமத் வேத மார்க்கப்ரதிஷ்டாப நாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌம ஸ்ரீவண் சட கோப ஸ்ரீ சட கோப ராமாநுஜயதீந்த்ர மஹா தேசிகனால் திரு வுள்ளமுகக்கப் பெற்றது" என்பது இவ்வந்தாதியின் 'டைடில் பேஜின் பின்புறம் கண்டபடி.

இதில் உள்ள "காப்பு" பின்வருமாறு :—

திருக்குருகூர் ந்தளகாபுரியோவெனச் செப்பிடவெண்
குருக்குருகூர் புனலெவ்வுளந்தாதியைக் கூறுதற்குத்
திருக்குருகூர் தனில் வந்தாதி வேதங்கள் செந்தமிழ் செய்
குருக்குருகூர மிலானடிப் போதகங் கொண்டனமே. (1)

உடையவராக மலரடிக்காட்படு வோர்க்கரும்பொன்
உடையவராக ரந்தந்தளிப்பானுறும் வாதியர் வாழ்வு
உடையவராக ந்துறந்து முக்கோல் கைக்கொண்டோங்கி நற்பேர்
உடையவராக விங்கெய்தெதி ராசனையுன்னு நெஞ்சே. (2)

அகமாந்த ளைப்படுவோர்கண் மெய்ஞ்ஞான வரும முத
மிகமாந்த நல்குங் கருணைப்பெருங்கடல் மெய்யனென்னு
நிகமாந்த தேசிகனு வேங்கடாதி பனேர்ந்திலனேற்
சகமாந்த ரார்களுக்குய் வேதஞ் ஞானச்சலதி நன்றே. (3)

தீப முனிவர லாமோ விருட்கச் செயலதுபோற்
பாப முனிவர வெம் மெதிர்மேவுங் கொல் பல்லடியார்
தாப முனிவர னீயவல்லானருள்சார்வண் சட
கோப முனிவர னுள்ளத்துள்ளே குடி கொண்டனனே. (4)

சீர்பெறலா மனனே யுனக் கொன்றுரை செய்திடக்கேள்
வார்பெறுங் கூர்நகங் கொண்டு பொன்பேரவன் மார்பிடந்த
வேர்கொள் ளழகியசிங்கப்பிரானடி யென்றுமுள்ளஞ்
சேர்சடகோ பவிராமாநு சன்பதஞ்சிந்தை செய்யே. (5)

ஆரியரென் றவரெல்லாரு மாரியராவர் கொல்லோ
பூரியரென் றவர்தங்கட் கெல்லாம் பெரும் பூரியனுங்
காரியனென் னைப்பராங்கதி சேரக்கருணை செய்யென
தாரியன்சீ ரங்கநாதமகாமுனி தானிற்கவே. (6)

பரம பாகவதோத்தமராகிய ஸ்ரீமான் குரவை இராமாநுஜ தாசர் இயற்றியுள்ள "நூற்றெட்டுத் திருப்பதித்திருப்புகழ்" எனும் நூலில் உள்ள "திருவெவ்வுளூர்" எனும் திருப்பதிக்குரிய திருப்புகழ் இவண்தருதும்.

தைய தந்தன தனன தானன
தைய தந்தன தனன தானன
தைய தந்தன தனன தானன -தனதான.

தெய்வ மொன்றலா லுபய மோவிலைச்
சைய மங்கைநா யகனு மாமலர்ச்
செய்ய முண்டகா சனனு நீயுமொத் தொருமூலச்

செய்தி கொண்டகா ரணம தேதெனிற்
பொய்மெய் ரண்டினு லறிய லாகுநற்
செய்கை மந்த்ரமா சமயம் வேதனுக் கிலைவேறு

கையில் வந்ததோர் ப்ரமக பாலவத்
தொல்லை யொன்றினே தவிர்கி லாதவற்
க்கைய முண்டுவாழ் தொழிலை நீதவிர்த் தனையீது

கையி லங்குமா மலக மாமனத்
துள்ள றிந்தபே ரறிவர் வீண்மதக்
கள்வ ரென்செய்வா ருனது மாய்கைவிட் டறிவாரோ

தைய லென்றசீ தையையி ராவணப்
பையல் கொண்டசோ கவன மீதுவைத்
தல்லல் கண்டநா ளவனை வேரறக் கிளையோடு

தள்ளி லங்கைமா நகர வீதியிற்
றுள்ளி நின்றுபே யகவவே நிணச்
சவ்வு தின்றுகூ ளிகளு லாவிடக் களமீதில்

எய்தி நின்றபோ ரிடைகி ரீடமற்
றையி ரண்டுகீழ் சிதற வாளிவிட்
டெய்து வென்றுவீ டணர்ப்ர தாபபட் டமதாகு

மெல்லை கண்டுசா னகியை மீளவிட்
டொல்லை தம்பியோ டனும னேடுமுற்
றெவ்வுள் வந்தவா விசய ராகவப் பெருமாளே.

என்பதே அது.

வரகவி திரு. வேங்கடகிருஷ்ண தாசர் என்பவர் புலவர் கோமான். இவர் தொண்டை நாட்டில் செங்கற்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை நகர்க்கு அணித்தான கோசை யெனும் பெயர் பெறுங் கோயம்பேடு கிராமத்தில் திருமண்காப்பணியும் வைணவ குலத்திற் பிறந்தவரென்றும், ஆசூரி ஸ்ரீ உப. வே. திருவேங்கடா சார்ய ஸ்வாமியின் திருவடியை ஆச்ரயித்தவரென்றும், கோசை காளிங்கராய பிள்ளையின் தம்பியாரென்றும், மேற்படி காளிங்க ராயருடைய குமாரர் திரு. வேங்கடதாசர் என்பார் என்றும், இவர் இயற்றிய "திருவெவ்வுட் கலம்பகம்" எனும் நூலைச் சில வித்வான்கள் முன்னிலையில் திருத்தி, சாலிவாகன சகாப்தம் 1789 ஆவதான அக்ஷயவாண்டு ஆனி மீ 20 உ அச்சிட்டு முடித்தனர் என்றும் தெரிகிறது. ஆகவே இந்நூல் இற்றைக்குச் சற்றேறக் குறைய 85-ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியதாகும். இதில் உள்ள சில பாக்கள் அடியிற் காண்க.

காப்புச் செய்யுட்கள்.

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன்.

திங்க டவழ்மதி ளெவ்வுட் கலம்பகஞ் செப்புதற்குப்
பொங்குடன் வா துறப் போந்தவன் புந்தி தெளிவுறவே
சங்கற்ப சூரியோ தயமெனு நூலினைச் சாற்றுஞ்செயந்
தங்குயர் தேசிகன் சேவடி யென்றன் றலைக்கண்ணதே. (4)

* * *

கதிதரு நின து கங்கைவார் கழலுங்
கமலனு ருந்தியுங் களிசேர்
கமலைவா ழொளிர்சீர் மார்பமு மளவிற்
கருணையார் நயனமுங் கவினுர்
மதிநிகர் முகமு வரைநிகர் புயமு
மகிமைசேர் பிரணவ மதனை
மலரவற் குரைமுத் திரையுறு கரமும்
வழுத்திடுஞ் சாலிகோத் திரராம்
மதியுயர் முனிவன் சிரமிசை யுறுநல்
வரந்தரு மபயவத் தமுமா
மணிதிக ழெழில்சேர் மகுடமு மகரக்
குழைகளு முப்புரி நூலும்

கதிரொளி விரிக்கும் பீதக வுடையும்
கவுத்துவ மணியொடு மறுவும்
கருமுகி லெனுநின் வடிவமு மடியேன்
கருத்துறச் செயுமி ராகவனே. (99)

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் "திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவப் பெருமாள் போற்றித் திருப்பஞ்சகம்" பாடி யுள்ளார். அதிலுள்ள ஆதியந்தப்பாக்கள்.

தண்ணமர் மதியே சாந்தந் தழைத்தசத் துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வு ளூரில் அமர்ந்தரு ளாதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரரா கவனே போற்றி. (1)

அற்புதத் திருவை மார்பில் அணைத்தபே ரழகா போற்றி
பொற்புறு திகிரி சங்கு பொருந்துகைப் புனிதா போற்றி
வற்புறு பிணிதீர்த் தென்னை மகிழ்வித்த வரதா போற்றி
வெற்புய ரெவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. (5)

என்பன.

ஸ்ரீ வானமாமலைமடம் ஆஸ்தானவித்வான் தென்திருப்பேரை **ஸ்ரீமத். ஸ்ரீ. அனந்தகிருஷ்ணையங்கார் அவர்கள்** இயற்றிய **திவ்யதேசப்பாமாலையின்கண்** உள்ள

ஒருசிலைபெண் ணென்ருக்கி யோர்மிதிலை யூரில்
ஒருசிலையி ரண்டாக்கி யோங்கும் - விரிசலசப்
பாத கரமகிமை பாரிற் றெரிவித்தோன்
தாதலர்க்கா வெவ்வுளினு தன்.

என்ற வெண்பா திருஎவ்வுள் வீரராகவன் மேலது.

தனக்குவமையில்லாத சீருஞ் சிறப்பும் எய்தி விளங்கும் திரு வெவ்வுளூர் விஷயமாக, ஸ்ரீவீக்ஷாரண்ய க்ஷேத்ரமாஹாத்ம்யம், பஞ்சபர்வ உத்ஸவாதிகள் தவிர விசேஷ உத்ஸவாதிகள், திரு மழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனப் பாசுரங் கள், நூற்றெட்டுத் திருப்பதியந்தாதிப் பாசுரம் குறிப்புரை களுடன், ஸ்ரீ வீரராகவ ஸுப்ரபாதம், ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் திருவாய்மலர்ந்தருளிய கிம்க்ருஹேசஸ்துதி, அத்துாப் புல் வள்ளல் அருளிச் செய்த ரகுவீரகத்யம் ஆகியவற்றைக்

கொண்டு பொலிகின்ற இத் "திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ மாலை" இத்தமிழ்ச் சங்கத்தின் 44-ஆவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இம்மங்கலமாலை இளங்காடு ஸ்ரீ உ. வே. வித்வான் ரங்காசாரியார் ஸ்வாமி திருவடி ஸம்பந்தம் பெற்று சிறந்த தேசிக பக்தராய் விளங்கும் **ஸ்ரீமான். அ. சக்ரபாணி பிள்ளை** அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற முற்பட்டு நிற்கும் சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர் **ஸ்ரீமான் லக்ஷ்மீ நரஸிம்ஹன்** என்கிற **கே. துரைசாமி பிள்ளை** அவர்களின் (Proprietor, Grand Hotel, Mount Road, Madras) பூரண பொருள் உதவி பெற்றுத் தன்னேரிலாத ஸ்ரீ வீரராகவன் திருவருளால் வெளிவருகின்றமையால் அவ்விரு வுத்தமர்கட்கும் அவர்கள் உற்றார் உறவினர்கட்கும் அவ்வமலன் பூரணவநுக்ரஹத்தைப் பொழிவானாக.

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

ஸ்ரீ ரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
28—2—1953.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

1.	பெருமாள்	ஸ்ரீ வீரராகவன் எவ்வுள்கிடந்தான்
2.	தாயார்	ஸ்ரீ கனகவல்லி (வஸுமதி)
3.	க்ஷேத்ரம்	புண்யாவர்த்தம்
	வனம்	வீக்ஷாரண்யம்
	திருக்கோயில்	கிம்க்ருஹம் (எவ்வுள்)
4.	விமானம்	விஜயகோடி
5.	புஷ்கரணி	ஹ்ருத்தாபநாசனி

மங்களாசாஸனம் :

1. திருமழிசைப்பிரான்
2. திருமங்கையாழ்வார்
3. ஸ்ரீ மந்நிகமாந்தமஹா தேசிகன்

ஸ்ரீ:

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ மாலை.

ஸ்ரீ வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீ வைகுண்ட திவ்விய நகரத்தைவிட்டு, பூலோகத்தில் ஸர்வ சேதநர்களையும் உஜ்ஜீவிப்பிக்கக் கருதி கருணையால், ஸ்வயம் வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், மானுஷம் என்னும் நான்கு விதமான 108 (நூற்றெட்டு)த்திருப்பதிகளுள் பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்ட ஸைத்தமாகிய இந்த புண்யாவர்த்த க்ஷேத்ரம் (வீக்ஷாரண்யம்) என்கிற திரு எவ்வுளூரில் ஸ்ரீ ஹ்ருத்தாப நாசன தீரத்தில் தவம் செய்து திருவஷ்டாக்ஷர சித்தியடைந்த ஸ்ரீ சாலிஹோத்ர முனிவருக்கு ப்ரத்யக்ஷமாகி ஸ்ரீ வீரராகவன் என்னும் திருநாமத்துடன் விஜயகோடி விமானத்தில் ஸ்ரீ சேஷசயனத்தில் திவ்யமங்கள விக்ரஹரூபனாய் பக்தர்கள் கோரும் வரங்களை அளிப்பதே விரதமாக்கொண்டு ஸ்ரீ சாலிஹோத்ர முனிவரின் சிரசின்மேல் தன் வலது ஹஸ்தத்தை வைத்தும், நாபீகமலத்தில் தோன்றின நான்முகனுக்குத் தன் இடது ஹஸ்தத்தினுல் ஞானேபதேசம் பண்ணிக்கொண்டும் தென் திசையாக சிரஸை வைத்துக் கொண்டு சயனித்தும் சேவை சாதிக்கிருர். இந்த பெருமாளின் வைபவத்தையும், க்ஷேத்ர மாஹாத்மியத்தையும் தீர்த்த மஹிமையையும் ஸ்ரீ மார்க்கண்டேய புராணத்தில் விரிவாய்க் காணலாம்.

மிதஞ்ஞானிகளும், பாலர்களும், ஸ்த்ரீகளும் சுலபமாய் அறிந்துகொள்ளும்படி தமிழ்ச் சொற்களால் வெகு சுருக்கமாய் இது எழுதப்பெறுகிறது.

திரு எவ்வுள்ளூர் மாஹாத்மியம்.

சதாநீக மஹாராஜா குமாரனுன ஸஹஸ்ரானீக மஹாராஜன் மார்க்கண்டேய முனிவரை நோக்கி "ஒய்! முனிசிரேஷ்டரே! யோகசித்தி யடையத்தக்க வனமும், புண்ய தீர்த்தமும், திருக்

கோயிலும் ஒன்றுசேர்ந்து எந்த க்ஷேத்திரத்திலிருக்கிறது? அதை அடியேனுக்குக் கிருபையாக அருளிச்செய்ய வேணும்” என்று வணக்கமாய் தெண்டன் ஸமர்ப்பித்துப் பிரார்த்தித்தார்.

மார்க்கண்டேய முனிவரும் மிகவும் களிகூர்ந்து, “ஓய்! ஸஹஸ்ரானீக மஹாராஜனே! கிருதயுகத்தில் தேவபாக முனிவருக்கும் சாலிஹோத்ர மஹரிஷிக்கும் இது விஷயமாய் நடந்த ஸம்வாதத்தைப் பின்வருமாறு சொல்கிறேன், கேளும்: கங்கா தீரத்தில் பதரிகாசிரமத்தில் தேவபாகர் என்னும் ஒரு முனி சிரேஷ்டர் இருந்தார். அவர் தவம் செய்து சித்தியடையத்தக்க பரிசுத்தமான தபோவனமும் ஸர்வவித பாபங்களையும் போக்கக் கூடிய புண்ய தீர்த்தமும் பக்தியுடன் உபாஸிப்பவர்களுக்கு இஹத்தில் பசு, புத்திர, தன, தான்யாதி போகங்களையும், பரத்தில் மோக்ஷத்தையும் கொடுக்கும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுமுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தை அருளிச்செய்ய வேணும்.” என்று ஸ்ரீ சாலிஹோத்ர மஹரிஷியைப் பிரார்த்தித்தார். ஸ்ரீ சாலிஹோத்ரர் தேவபாகரைப் பார்த்து “ஓய் மஹரிஷியே! நீர் கேட்பது மிகவும் துர்லபமானது. ஆகிலும் சொல்கிறேன், கேளும்: அகஸ்திய ரிஷியினுஸ்ரமத்தில் உண்டாகி விந்திய பர்வதத்தின் அருகில் வெள்ளிமலை வழியாய் வருகிற விருத்தக்ஷீரநதிக்கு வடக்கு, கல்லாற்றிற்குக் கிழக்கு, குசஸ்தலீ நதிக்குத் தெற்கு, சமுத்திரத்திற்கு மேற்கு இதன் நடுவில் கிழக்கு மேற்கு ஐந்து யோசனை நீளமும் தெற்கு வடக்கு ஒரு யோசனை அகலமும் உள்ள புண்யாவர்த்த க்ஷேத்திரத்தில் வீக்ஷாரண்யமென்கிற தபோவனமும் அதில் ஹ்ருத்தாப நாசனமென்கிற தேவகாதமான ஒரு புண்ணியஸரஸும் அதன் வடகரையில் விஜயகோடி விமானத்தில் பாம்பணைமேல் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணனின் திருக்கோயிலும் இருக்கிறது. நீர் அந்த க்ஷேத்திரத்தில் தவம் செய்து முக்தியடையலாம்.” என சாதித்தார்.

வீக்ஷாரண்ய மஹிமை.

இந்த புண்யாவர்த்தத்தில், புன்னை, சுரப்புன்னை, சண்பகம், அசோகம், மகிழன், தென்னை, வாழை, மா, பலா முதலான உயர்ந்த மரங்களால் அடர்ந்தும் நெல் முதலிய ஓஷதிகளால் பிரகாசித்துக்கொண்டும், மல்லிகை, முல்லை, நீலோத்பலம்,

மருக்கொழுந்து, தவனம், தாழை முதலிய புஷ்பங்களாலும் பரிமளித்துக்கொண்டும் யாகாதிகள் செய்ய தர்ப்பம், ஸமித்து முதலிய வைதிக வஸ்துக்கள் நிறைந்தும் மயில், குயில் முதலிய பறவைகளுடன் கிளிகள் கொஞ்சி விளையாடுகின்ற வீக்ஷாரண்யம் என்னும் ஓர் வனமிருக்கிறது. அதில் அநேக குகைகளும் நகரங்களும் இருக்கின்றன. அவற்றில் அத்ரி, வசிஷ்டர், வியாசர், சாலிஹோத்ரர் முதலிய மஹரிஷிகளும் ஷட்கர்ம நியதர்களான பிராமணர்களும் மிக ஸம்பத்துள்ள வைசியர்களும் சூத்திரர்களும் வசிக்கிருர்கள். இவர்கள் செய்யும் யாகாதிகளையும் ஸத் கர்மங்களையும் கெடுத்து இவர்களையும் ஹிம்சிக்கவேண்டி ராக்ஷஸர்கள் மாயாவிகளாய் இவ்வனம் புகுந்து இவர்கள் செய்யும் அதிக்கிரமங்களைக் கண்டு பக்த ரக்ஷகனை பகவான் சகிக்காத வனுய் இவர்களை ஸம்ஹரித்தார். மூவுலகங்களையும் நடுநடுங்கச் செய்த மதுகைடபர்களுக்கும் மஹா விஷ்ணுவுக்கும் மஹா பயங்கரமான யுத்தம் நடந்தது. அப்போது தேவர், அசுரர், ராக்ஷஸர், மனிதர் முதலியவர்கள் பயந்து ஓடி விவேகமற்று மயங்கி நிலைதவறினுர்கள். அந்த மதுகைடபர்கள் ஸத்யலோகம் வரையில் உயர்ந்திருந்தமையால் அவர்களிடம் பயந்து சூரிய சந்திரர்கள் ஸஞ்சரிக்கவில்லை, நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கவில்லை, வாயு வீசவில்லை, பிராமணர்களும் ரிஷிகளும் வேதாத்யயனத்தை யும் யாகாதி ஸத்கர்மங்களையும் செய்ய முடியவில்லை. இவ்வித கஷ்டங்களை அநுபவித்து வருகையில் பக்த பராதீனனை லக்ஷ்மீகாந்தன் மூவுலகங்களையும் எரிக்கக்கூடியதாயும் ஆயுதங் களுக்கெல்லாம் ராஜாவுமான தம் சுதர்சனயுதத்தை இந்த ராக்ஷஸர்கள் மீது பிரயோகித்தார். தங்களைத் துரத்திக் கொண்டோடிவருகிற அந்த சக்கராயுதத்தைக் கண்டு திகைப் படைந்து அதற்குத் தப்பித் தங்களை மறைந்து காப்பாற்றிக் கொள்ள எங்கும் சுற்றி வேறு வழியில்லாமல் இவ்வீக்ஷாரண்யத் தில் புகுந்தனர். ஸர்வக்ஞனை பகவான் இவர்களைத் தேடிவந்து விஜயகோடி விமானத்தில் வீற்றிருந்து சக்கராயுதத்தால் ஸம்ஹரித் தார். பிறகு ஆபத்துக்களெல்லாம் நீங்கி ஸூர்யாதி தேவதைகள், பிராமணர்கள், ரிஷிகள் முதலிய சகலரும் தத்தம் கர்மாநுஷ்டானங் களை முன்போல செய்து இஷ்டஸித்தியடைந்தார்கள்.

புண்யாவர்த்தம்—இந்த க்ஷேத்திரத்தில் யாராகிலும் தெரிந்தாவது, தெரியாமலாவது புண்ணியம் செய்தாலும்



விஜய கோடிவிமானம்.

பாபத்தைச் செய்தாலும், ஜனித்தாலும், மரித்தாலும் பெருந் துயரைத்தரும் நரகலோகத்தை யடையாமல் நற்கதியையே அடைகிருர். இவ்விடத்தில் ஒருதரம் செய்த புண்யம் பலவித மாய் பலிப்பதால் புண்யாவர்த்தம் என்றும், இதில் விஷய ஸுகத்தில் அமர்ந்திருக்கிற மனுஷியருடைய மாம்ஸ திருஷ்டி களுக்கும் சுலபமாக பகவான் காணப்படுகிருனுகையால் வீக்ஷாரண்யம் என்றும் லோகத்தில் ப்ரஸித்தம். இவ்விடத்தில் எம்பெருமான் எப்பொழுதும் விஜயகோடி விமானத்தில் எழுந் தருளியிருக்கிருர். எம்பெருமான் மஹா வீரர்களான மதுகைடபர் களே இந்த விமானத்திலெழுந்தருளியிருந்து ஜயித்தானுகையால் இந்த விமானத்திற்கு விஜயகோடி விமானம் என்று பெயர். பின்னும் ஸஹஸ்ரானீக மஹாராஜன் மார்க்கண்டேய முனிவரை நோக்கி "ஓய் முனிசிரேஷ்டரே! இதுவரையில் எனக்கு தேவரீர் அருளிச்செய்த க்ஷேத்திர மஹிமையைக் கேட்டு ஸந்துஷ்டனு னேன். இனி தீர்த்த மஹிமையைக் கேட்க விரும்புகிறேன். கிருபைசெய்ய வேணும்." என்று பிரார்த்தித்தார்.

ஹிருத்தாபநாசன தீர்த்த மகிமை.

அன்னம், நீர்க்காக்கை முதலிய ஜலசர பக்ஷிகளாலும், தாமரை, செங்கழுனீர், அல்லி, ஆம்பல் முதலான புஷ்பங்களா லும் நிறைந்து அலேகள் மோதிக்கொண்டிருக்கிற இந்த ஹ்ருத் தாப நாசன தீர்த்தத்தைத் தொட அதிகாரமில்லாத ஜாதியார்கள் தரிசித்தாலும், ஸ்நானம் செய்ய சக்தியற்ற வியாதியஸ்தர்கள் இந்த தீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்து கொண்டாலும், சக்தி யுள்ளவர்கள் ஸ்நானம் செய்தாலும் ஹ்ருதயத்திலிருக்கிற சகல தாபங்களேயும் ஒழித்துவிடுமாதலால் ஸகல லோகங்களிலும் ஹ்ருத்தாபநாசன தீர்த்தமென புகழப்படுகிறது. (ஹ்ருத்-ஹ்ருத யத்திலுள்ள, தாப-தாபங்களே, நாசனி-போக்கக் கூடியது.) இடைவிடாமல் தினந்தோறும் பக்தியுடன் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து பகவானேயும் தொழுது வந்தால் இகத்தில் ஸகல போக பாக்கியங்களேயும் பெற்று பரத்தில் மோக்ஷத்தையும் அடைவார்கள். பகவான் இந்த க்ஷேத்திரத்தில் அவதரித்த தை அமாவாசை யன்று பிரம்மாதி தேவர்களும் நாரதாதி முனிவர்களும் மற்றும் சகலமான ஜனங் களும் ஸ்நானம் செய்து மகத்தான பலனே அடைகிருர்கள்.



ஹ்ருத்தாபநாசன தீர்த்தம்.

உதாரணம்: கிருத யுகத்தில் கௌசிகன் என்னும் ஓர் அந்தண வாலிபன் அருந்தவப் பயனாய் சர்வ சாஸ்திரங்களையும் கற்று மாதா, பிதா, குரு இவர்களுக்கு வணங்கி சிஷ்ரூஷை செய்து வந்தான். அவனுக்குத் தீர்த்த யாத்திரை செய்யவேண்டு மென்கிற எண்ணமுண்டாயிற்று. முதலில் கங்கா யாத்திரை செய்ய வடக்கே போகும்போது வழியில் தண்டகாவனத்தில் சேரும்போது சூர்யாஸ்தமனமாயிற்று. பேரிருள் நிலவிய அக் காட்டில் புலி முதலிய துஷ்ட மிருகங்களுக்குப் பயந்தும் பசி தாங்க முடியாமல் தவித்தும் இந்த பிராமணன் ஒரு புதரில் மறைந்தான். பூர்வஜன்ம பாப சேஷத்தால் அங்கே ஒரு சண்டாளனைக் கண்டான். சண்டாளன் அந்த பிராமணனைப் பார்த்து விசாரிக்கும்போது பதில் சொல்லக்கூட சக்தியற்றவனாய் இருக்கும் அவன் தீனவார்த்தையைக்கேட்டு அவனைத் தன் தோளின்மேல் ஏற்றிக்கொண்டு தன் இல்லம் சென்று பசி தாகம் தீரும்படி பலவித ஆகாரங்களினால் பக்தியுடன் உபசரித்தான். பசி தாக மேலீட்டால் மதிமயங்கிய பிராமணன் சண்டாளன் அளித்த உணவு என்றறியாமல் அதை உண்டு களைப்பாரப் படுத்தான். சண்டாளன் யுவதியும், ரூபவதியுமான தன் பெண்ணை நன்றாயலங்கரித்து நடந்துவந்த சிரமத்தால் களைப் புற்றுப் படுத்திருக்கும் அந்த பிராமணனின் பாதங்களைப் பிடித்து சிஷ்ரூஷை செய்துகொண்டிருக்கச் செய்தான். சிரமம் தீர்ந்து விழித்துக்கொண்ட பிராமணன் அவன் பூர்வோத்தரங்களைக் கேட்டு மனம் புழுங்கி தான்செய்த தப்பிதத்தை உணர்ந்து அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டி அவ்விடம் விட்டுப் புறப்பட்டான். அக்கன்னிகையும் அவன் பின் தொடர்ந் தாள். பலவிடங்களுக்கும் சென்று அநேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் அவனுக்கு விமோசனம் ஏற்படவில்லை. கடைசியில் பூர்வ புண்யபலத்தினால் தை அமாவாசை தினம் இந்த புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அஸஹ்யமான தன் பாபம் போய் நற்கதியை யடைந்தான்.

தக்ஷப்ரஜாபதிக்கு ஸதி என்றொரு பெண்ணிருந்தாள். அவளை ருத்திரன் விவாஹம் செய்துகொண்டு ஹிமாலயத்தின் பக்கலில் தவம் செய்துகொண்டிருந்தார். அவ்வமயம் தக்ஷன் தான் செய்யும் யாகத்திற்குத் தன் பெண்களில் ஒருத்தியாகிய சதியையும் ருத்திரனையும் தவிர மற்றப் பெண்களையும் மருமகன்

களையும் அழைத்திருந்தான். சதியோ தன்னை அழைக்கப்படாமலிருந்தும், தன் பர்த்தாவினுல் தடை செய்யப்பட்டும், அதை லக்ஷியம் செய்யாமல் தன் ஸகல பரிவாரங்களோடும் தன் பிதாவின் யாகசாலைக்குப் போனுள். அங்கே தன்னைப் பார்த்தும் விசாரியாமலிருந்த கோபத்தால் முகம் கறுத்து, உதடுகள் துடிக்க, தன் பிதாவைப் பார்த்து "ஓ பிதாவே! நீர் என்னையும் மஹா வல்லமை பொருந்திய என் பர்த்தாவையும் தவிர மற்றப் பெண்களையும் மருமகன்களையும் அழைத்து எங்களை நீர் அவமானம் செய்யும் படியான காரியம் என்ன செய்தோம்? நீர் செய்யும் யாகம் நிறைவேறுமா?" என்று சொல்லிக்கொண்டே தன் சரீரத்தை யோக மஹிமையால் தன் பிதாவின் முன்னிலையிலேயே விட்டுவிட்டாள். இதைக்கேட்ட பரமசிவன் கண் சிவந்து பிரளயகாலம் போல் சினந்து தன் நெற்றியிலுண்டான வியர்வையினுல் மஹா பராக்கிரமசாலியான வீரபத்திரனைச் சிருஷ்டித்து, தன்னை அவமானப்படுத்தித் தனக்குக் கெடுதியும் செய்த தக்ஷனைக் கொன்று வரும்படி ஆக்ஞாபித்தார்.

மஹா பராக்ரமசாலியான அந்த வீரபத்திரன் தக்ஷனுடைய யாகசாலையில் புகுந்து, அங்கிருந்த ரித்விக் முதலிய மஹரிஷிகளையும் பிராமணர்களையும் பயமுறுத்தித் துரத்திவிட்டு, தேவர்களின் சரீரத்தைத் துண்டு துண்டாக வெட்டி யெறிந்து, பிறகு மஹரிஷிகளின் மீசை தாடிகளைப் பிடுங்கி இம்சித்து, கடைசியில் தக்ஷனின் சிரசை கத்தியால் வெட்டி அக்கினியில் எறிந்தான். இதனுல் ராக்ஷஸர்களும் திருப்தியடைந்தார்கள். நியமனத்தை நிறைவேற்றின வீரபத்திரன் சிவனுடைய திருவடிகளை வந்தடைந்தான். பிரம்மவித்தான தக்ஷனைக் கொன்றது ருத்திரனுடைய ஆக்ஞையாகையால் பிரம்மஹத்தி ருத்திரன் எதிரில் வந்து நின்றது. அதை விலக்க எத்தனையோ புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் அதை ஒழிக்க சாத்தியப்படவில்லை. அது பின் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதனுல் வருத்தமடைந்து பரிதபித்துக் கொண்டிருந்தபோது ஆகாசவாணி சிவனைப் பார்த்து, "ஓய் பகவானே! புண்யாவர்த்த க்ஷேத்திரத்தில் வீக்ஷா வனத்தில் ஹ்ருத்தாப நாசனமென்கிற ஒரு சரஸ் இருக்கிறது. அதில் நீர் ஸ்நானம் செய்தால் உம்முடைய பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தியாகிவிடும்." என்றது. இதைக்கேட்ட மஹாதேவனும் விரைந்தோடி வந்து ஆகாசவாணி சொல்லியபடி இந்த புண்ய தீர்த்தத்

தில் நீராடினர். அந்த பிரம்மஹத்தியும் உடனே அவரை விட்டு நீங்கிவிட்டது. ருத்ரன் ஹ்ருத்தாப நாசினி புஷ்கரணியின் கரையில் வாயு மூலேயில் கோயில்கொண்டு (தீர்த்தீஸ்வரன் திரிபுரசுந்தரி) இன்னும் வீற்றிருக்கிருர். "ஓய் சாலிஹோத்ர முனிவரே! விஷ்ணு பாதத்திலுண்டான கங்கை, சர்வ பாபங்களேயும் போக்கடிக்கத் தக்கதாய் ருத்திரனுடைய ஸ்வாதீனத்திலிருக்கையில் அதில் நீராடி தன் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக்கொள்ளாமல் ஹ்ருத்தாபநாசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து போக்கடித்தது என்ன மகிமை? அதைச் சொல்லவேணும்." என்று தேவபாகர் மறுபடியும் கேட்டார். தை அமாவசை சிரவண நக்ஷத்திரம் கூடிய தினத்தில் ஹ்ருத்தாபநாசன தீர்த்தத்தில் நீராட வந்திருந்த வசிஷ்டர், பார்க்கவர், வியாசர், அத்ரி, வால்மீகர், யாக்யவல்க்யர், புலஸ்தியர், ஆங்கீரஸர், ஜமதக்னி, விச்வாமித்ரர், சாலிஹோத்ரர் முதலான மஹரிஷிகளேப் பார்த்து நாரதர் "ஓய் தபோதனர்களே! நீங்கள் புண்ய தீர்த்தமாகிய கங்கையைவிட்டு இவ்விடம்வந்து இந்த தீர்த்தத்தில் நீராடவேண்டிய காரணம் என்ன?" வென்று கேட்டார். அதற்கு அந்த ரிஷிகள் யோசித்துப் பார்த்து, "ஓய் நாரத பகவானே! பிரம்மதேவனேக் கேட்டால்தான் தெரியும்." என்றனர்.

திரிலோக ஸஞ்சாரியும் திரிகால ஞானஸம்பந்நனுமான அந்த நாரத பகவான் பிரம்மலோகம் சென்று, தன் பிதாவான நான்முகனேச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தன் கரங்கூப்பி பய பக்தியுடன் * ஸ்ரீஹ்ருத்தாப நாசன தீர்த்தத்தின் மஹிமையை அடியேனுக்குச் சொல்லவேணு மென்று பிரார்த்தித்தார். நான்முகனும் கிருபைகூர்ந்து சொன்னதாவது: "கிருத யுகத்தில் ஸ்வாயம்புவ மனு வம்சத்தில் ஜனித்த மஹா புண்ணியசாலியான ப்ரத்யும்ன மஹாராஜன் புத்திரப் பேறற்று மிகவும் மனக்கிலேசமடைந்து புத்திரப் பேறடையும் பொருட்டு வீக்ஷாரண்ய க்ஷேத்திரத்தில் ஹ்ருத்தாபநாசன தீரத்தில் தன் இடது கால் கட்டைவிரலே மாத்திரம் ஊன்றிக்கொண்டும், கண்களே மூடிக்கொண்டும் நூறு வருஷகாலம் கடுந்தவம் செய்தான். பக்த பராதீனனுன

---

* மஹா பாரதத்தில் ஆரண்ய பர்வத்தில் 99-வது அத்தியாயத்தில் இந்த தீர்த்த மஹிமையைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பரந்தாமன் ஸ்ரீமந் நாராயணன் ஸர்வாபரண பூஷிதனுய் சர்வா யுதங்களையும் தரித்துக்கொண்டு கருடாரூடனுய் புஷ்ய (தை) அமாவாசையில் சேவை சாதித்தார். ராஜன் கண்களை மூடிக் கொண்டு தவம்செய்து கொண்டிருந்தமையால் ஆகாச வாணியா லறிந்து கண்களைத் திறந்து கண்ணுரக்கண்டு ஸேவித்து புள காங்கித மடைந்தார். அவருடைய அருந் தவத்தால் பிரஸன்ன மான பகவான் அவர் கேட்கும் வரங்களைக் கொடுப்பதாக அனு க்ரஹித்தார். அவர் இந்த தீர்த்த ஸ்நான மஹிமையால் தனக்குப் புத்திரர்கள் ஜனிக்க வேண்டுமென்றும், தை அமாவாசையில் பகவான் இங்கே ஸான்னித்யமானதால் இந்த தீர்த்தத்துக்கு மற்ற எல்லா தீர்த்தங்களைவிட அதிக மஹிமை உண்டாக வேணு மென்றும் பிரார்த்தித்தார்.

அரசன் கோரியபடி பகவான் இவ்விரண்டு வரங்களையும் கொடுத்தார். பகவானே இம்மஹிமையை உண்டுபண்ணினபடி யால் அதுமுதல் இந்த தீர்த்தம் கங்காதி தீர்த்தங்களைவிட அதிக மஹிமையுள்ள தென்று மூவுலகங்களிலும் புகழப்படுகிறது." என்று சொன்னுர்.

வஸுமதி விவாஹம்.

வீக்ஷாரண்யத்தில் தர்மஸேனபுரமென்று ஒரு பெரிய பட்டண மிருந்தது. அதை திலீப மஹாராஜ வம்சத்திலுண்டான தர்ம சேன மஹாராஜன் விஷ்ணுதேவன் போல் ஆண்டு வந்தான். அவனுக்குக் கௌதமிதேவி என்னும் தர்மபத்னி இருந்தாள். இவர்களுக்கு வசுமதி என்னும் ஸர்வோத்தம லக்ஷணங்கள் பொருந்திய பெண் பிறந்தாள். மஹா லக்ஷ்மியைப் போலிருக் கிற இந்தப் பெண்ணைப் பார்த்துக் களிகூர்ந்து இவளுக்குத் தக்க புருஷன் எங்கே கிடைக்கப்போகிருன் என்று யோசித்துக் கொண்டேயிருந்தான். பெண் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் சுக்ல பக்ஷ சந்திரனைப்போல் வளர்ந்து வந்தாள். ஒரு நாள் இவள் வீக்ஷாரண்யத்தில் ஹ்ருத்தாபநாசன தீரத்தில் புஷ்பம் கொய்யத் தன் சகிகளுடன் போனுள். அங்கே ஸ்ரீ வீர ராகவன் மன்மத ஸ்வரூபியாய் ஒரு யௌவன ராஜகுமாரனுகக் காணப்பட்டார். அவள் அவரைக் கண்களைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டு சித்திரத்தில் எழுதின பதுமைபோல் அசை வற்று மோஹித்து நின்றுள். அவரும் தாமரை இதழ்கள் போன்ற

கண்களும், மன்மதன் வில்போன்ற புருவங்களும், மின்னற் கொடிபோன்ற தேக காந்தியும், கருவண்டுக் கூட்டம்போன்ற



ஸ்ரீ கனகவல்லித் தாயார்.

கூந்தலும், குயில் போன்ற குரலும், சந்திரபிம்பம் போன்ற முகமும், கிளிக்கொப்பான வார்த்தையும், பூமிக்கொப்பான பொறுமையும், நிலவு போன்ற புன்சிரிப்பும், மல்லிகை மொக்குப்போன்ற தந்தங்களும், கோவைப்பழம் போன்ற உதடுகளும் கும்பங்கள் போன்ற குசங்களும், உண்டோ இல்லேயோ என்று சந்தேகப்படும் படியான இடையும், அன்னம்போன்ற நடையும் பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும் இந்த ஸர்வாபரண பூஷிதையான பெண்ணேப்பார்த்து மனமகிழ்ந்து, திரு எவ்வுள்ளில் நாம் அவதரித்ததை அறிந்து திருமணம் செய்துகொள்ள லக்ஷ்மிதேவியே இங்கு அவதரித்திருக்கிருள் என்று சந்தோஷமடைந்து இவளிடம் வந்து "பெண்ணே! நீ யார்? உன் வரலாறு என்ன?" வென்று கேட்டார். இவளும் அந்த ராஜகுமாரனேப்பார்த்து "நான் தர்மஸேன மஹாராஜாவின் பெண். இது வரையில் எனக்குத் தக்க வரன் கிடைக்காததால் இன்னும் கலியாணமாகவில்லே. என்னேக் கலியாணம் செய்து கொள்ள உமக்கு விருப்பமிருந்தால் நல்ல வரன் தேடியலேயும் என் பிதாவை நீர் பார்த்துக் கேட்டால்

உமக்குக் கொடுக்க சம்மதிப்பார். இந்த வீக்ஷாரண்யத்தில் ஹ்ருத்தாபநாசன தீரத்தில் திருக்கோயில்கொண்டு விஜய கோடி விமானத்தில் ஸ்ரீ ஆதிசேஷன்மீது சயனித்திருக்கும் ஸ்ரீ வீரராகவனை பக்த ஜனங்கள் இடைவிடாமல் சூழ்ந்திருப்பதால் பிரம்மாதி தேவர்களும் ரிஷிகளும் மனுஷியர்களும் வந்து காத்திருந்து சமயம் பார்த்து ஸேவித்து அடைகிறதுபோல நீரும் அவரை உபாஸித்தால் தடையில்லாமல் கூடிவரும்.'' என்று சொன்னாள்.

"ஓய் பெண்ணே! என்னை விவாஹம் செய்துகொள்ள உனக்கு இச்சையிருந்தால் உங்கள் குலதெய்வமான இந்த வீர ராகவனால் எவ்வித தடையும் இராது.'' என்றார். பெண் இதைக் கேட்டு தன் இஷ்டம் பூர்த்தியாகுமென்று நினைத்துக்கொண்டு தன் பிதாவிடம் போய்ச் சொன்னாள். தர்மஸேன மஹாராஜன் மந்திரிகளுடன் ப்ராம்மணர்களை முன்னிட்டுக் கொண்டுவந்து, அந்த ராஜகுமாரனைப் பார்த்துத் தன் கன்னிகையைத் தானம் செய்ய முனைந்து, "ஓய் ராஜ குமாரனே! உம்முடைய ஊர் என்ன? பெயர் என்ன? தாய் தகப்பன் யார்? உமது குலகோத்திரங்கள் என்ன? இவ்விடம் வந்த காரணம் யாது? இவற்றைத் தயவு செய்து எனக்குச் சொல்லும்.'' என்றார். அதைக் கேட்ட இராஜகுமாரன் "ஓய் அரசனே! என் ஊர், பெயர், தாய், தகப்பன், குலம் கோத்திரம் முதலானவற்றைச் சொல்லமுடியாது. உம்முடைய கன்னிகையை எனக்குக் கொடுப்பீராகில் நான் அவளோடு இங்கேயே நிறைவற்ற செல்வத்துடன் வசிக்கிறேன். அதன் பிறகு நான் எங்கும் போகிறதில்லை.'' என்று சொல்லி ஸ்ரீ சேஷசாயியான ஸ்ரீ வீரராகவன் முன்னிலையில் ஸத்யம் செய்தார். தர்மசேன் மஹாராஜன் மிகுந்த ஆனந்தத்துடன் கலியாணப்பந்தல் போட்டு தனதான்யாதி கஜாந்தைச்வர்யமான ஸகல வரிசைகளுடன் கன்னிகாதானம் செய்தார். ராஜகுமாரனை மணவாளன் அவள் கையைத் தன் கையால் பிடித்துக் கொண்டு ஸகலமானவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்தப் பெண்ணோடுகூட சேஷசயனத்தில் ஏறினர். அப்போது அந்த மணவாளனை ஸ்ரீ வீரராகவனாகவும், வசுமதியை மஹா லக்ஷ்மியாகவும் தர்மஸேன மஹாராஜன் முதலானவர்கள் நினைத்து, ஸேவித்து பேராநந்த மடைந்தார்கள். அவ்வரசனும் எம்பெருமானுடைய பேரருளால் நற்கதியை அடைந்தான்.

சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்து அச்வமேதத்தைச்

செய்தருளி ஒருயுக பேதத்தில் தர்மபத்தினியாகப் ப்பிரதிஷ்டை செய்துகொண்ட ஸ்வர்ணமயமான ஜானகிதேவியே பின்பு ஸ்ரீராம பிரானுடைய நியமனத்தினால் தர்மஸேன மஹாராஜ குமாரி வஸுமதி தேவியாக அவதரித்தாளென்றும், அந்த கனகப் பிரதிமையின் அவதாரமென்கிற மஹிமையால் அந்தப் பிராட்டிக்கே கனகவல்லித் தாயார் என்கிற திருநாமம் வந்தது.

வசுமதி தேவியை ஸ்ரீவீரராகவன் திருமணம் செய்துகொண்டது முதல் பிரதி சித்திரை மாதத்தில் நடக்கும் பிரம்ம உற்சவத்தைப் போலவே பிரதி தை மாதத்திலும் அனுஷ நக்ஷத்திரத்தில் த்வஜாரோஹணமாய் பிரதி தினமும் இரண்டு வேளைகளிலும் ஸ்வர்ணமயமாயும் ரஜதமாயு மிருக்கிற வாகனங்களில் ஆரோகணித்து வசுமதிதேவி அவதரித்த ஸ்தலமாகிற மக்ஷிகாவந மென்கிற ஈக்காட்டிற்கு ஸகல வாத்தியங்களுடன் வேதபாராயண, இதர பரிஜனங்களுடன் வீதியலங்கரித்து உத்ஸவத்தின் 9-வது தினம் தர்மஸேனமஹாராஜனுடைய ஜன்ம நக்ஷத்திர மாகிற பூரட்டாதி நக்ஷத்திரத்தில் மங்கள ஸ்நானம் என்கிற தீர்த்தவாரியைக் கண்டருளுகிறார்.

சாலிஹோத்ர முனிவருடைய சரித்திரம்.

கிருத யுகத்தில் பத்ரிகாச்சிரமத்தில் புருபுண்யரென்கிற ஒரு ப்ராமணர் தவம் செய்துகொண்டிருந்தார். அவருக்கு ஸதீ என்னும் பத்னியுண்டு. இவர்களுக்கு வெகு காலம் புத்ரஸம்பத்துண்டாகவில்லை. ஆகையால் காம்ய சாஸ்திர விதிப்படி சாலியக்யம் செய்தால் பிள்ளை பிறக்குமென்று ஆஹுதி ஒன்றுக்கு இருபத்தி எட்டு நெல் வீதம் ஆயிரம் ஆஹுதிகளை ஒரு வருஷகாலம் செய்தார். அந்த அக்னியில் பக்த ரக்ஷகனை ஸ்ரீ லக்ஷ்மீகாந்தன் ஸர்வாலங்கார பூஷிதனாய் ஸர்வாயுதபாணியாய் பிரஸன்னமாகி அந்த ப்ராமணனைப் பார்த்து "ஓய் பிராமணச்ரேஷ்டரே! உமது யாகத்தால் நான் பரிபூர்ணனானேன். உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும்." என்றார். பிராமணர் அவரைப் பார்த்து ஆனந்தத்துடன் தண்டன் ஸமர்ப்பித்து நல்ல புத்திரனைத் தரவேணுமென்று ப்ரார்த்தித்தார். பகவான், "ஓய் பிராமணரே! உமக்கு ஓர் நன் மகன் ஜனிப்பான். அவன் சாலிஹோமத்தினால் உண்டாகிற படியால் சாலிஹோத்ரர் என்னும் பெயரால் அழைக்கப்படுவான்." என்று அனுக்ரஹித்து மறைந்தார். ப்ராமணன் அக்னியிலிருந்து

வெளியில் விழுந்த நெற்பொரிகளைப் பொறுக்கித் தன் பத்தினிக்குக் கொடுத்தார். அதை ஸதீதேவி புஜித்து கர்ப்பமாகி, பத்தாவது மாதத்தில் ஜடா மண்டலத்துடனும், ஊர்த்வ புண்ட்ர ரேகைகளுடனும் கூடிய மகவைப் பெற்றாள். பிதா புத்திரனைப் பார்த்து மகிழ்ந்து, யுக்த காலத்தில் ஜாதகர்மாதிகளைச் செய்வித்து, பிறகு கலியாணமும் செய்து வைத்தார். சாலிஹோத்ரரும் மாதா பிதாக்களுக்குச் சிஷ்ரூஷை செய்யும் காலம் தவிர மற்றக் காலங்களில் தவம் செய்துகொண்டிருந்தார். பிறகு வீக்ஷாரண்யம் வந்து சேர்ந்தார். தை அமாவாசை புண்ய காலத்தில் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய பிரம்மாதி தேவர்களும் பிருகு முதலிய ரிஷிகளும் முனிவர்களும் காயத்ரீ அருந்ததீ முதலிய தேவிகளும் அப்ஸரஸ்த்ரீகளும், மனிதர்களும் ஆகாயத்திலும் பூமியிலும் நாலா பக்கங்களிலும் வந்து நிறைந்திருந்தார்கள். தானும் அதில் நீராட இடமகப்பட ஸாயங்காலம் வரையில் காத்திருந்து நெருக்கம் தீர்ந்த பிறகு வடகரையில் ஸ்நானம் செய்து விதிப்படி தர்ப்பணாதிகளைப் பண்ணினார். ஆகாரமில்லாமல் ஒரு வருஷ காலம் தவம் செய்தார். மறு தை அமாவாசை தினம் ஒரு வருஷ விரதம் பூர்த்தியானதாக எண்ணி அன்று காலை முதல் பொறுக்கின உஞ்சமென்கிற தான்யத்தை அமுது பொடியாக்கி சாயங்காலம் பாகம் செய்து பகவானுக்கு பாஞ்சராத்ர விதிப்படி திருவாராதனம் செய்து அன்னத்தை நிவேதனம் செய்து வைச்வ தேவாதிகளைப் பண்ணி மிகுதியை நாலு பாகமாக்கி அதிதிக்காக ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு அதிதியை எதிர்பார்த்திருந்தார். சரணாகத வத்ஸலனாகிய பகவான் ஒரு கிழப்ராமண ரூபியாகத் தடியை ஊன்றிக்கொண்டு கமண்டலம், குடை, பாதரக்ஷை இவற்றுடன் கூடி வெகுதூரம் நடந்து வந்தவர்போல் ஆயாசத்துடன் பசி தாகத்தால் வருந்துபவராகக் காணப்பட்டார். சாலிஹோத்ரர் அவருக்கு சிரமம் நீங்கும்படி உபசரித்து அதிதிபாகமாக வைக்கப்பட்டிருந்த அன்னத்தை ஸமர்ப்பித்தார். கிழப்ராமணர் அதைப் புசித்துவிட்டு ஐந்து ஆறு நாட்களாய் சாப்பிடாததால் தனக்குப் பசி அடங்கவில்லையென்றார். சாலிஹோத்ரரும் இன்னும் இரண்டு பாகங்களை ஒவ்வொன்றாகப் பரிமாறினார். அவற்றையும் உண்டு உலகமுண்ட பெருவாயனான அந்த ப்ராமண ரூபியான பகவான் இன்னும் அதிருப்தியாயிருப்பதைக் கண்டு மிகுந்த நாலாவது பாகத்தையும் ஸமர்ப்பித்தார். கிழவர் அதைப் புசித்து திருப்தி

113150

யடைந்ததாகச் சொல்லி மறைந்தார். சாலிஹோத்ரர் அன்று உபவாசமிருந்து மறுநாள் ஸ்னானாதி நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு முன் போலவே ஆகாரமில்லாமல் ஒரு வருஷம் தவம் செய்தார். மறு தை அமாவாசையன்று பிரம்மாதி தேவர்களும் மற்றவர்களும் முன்போல் வந்து ஸ்நானம் செய்வதைப் பார்த்து ஸந்துஷ்டனாய் தாமும் பசி தாகங்களால் கிருசமான தன் சரீரத்துடன் தள்ளாடி விழுந்துகொண்டு அந்த தீர்த்தத்தில் நீராடி தர்ப்பணாதிகளைச் செய்துவிட்டு ஒவ்வொரு நெல்லாகப் பொறுக்கின உஞ்ச நெல்லைக் குத்தி, பாகம் செய்து, பகவானுக்கு நிவேதனம் செய்து, வைச்வதேவாதிகளைச் செய்து முடித்து, அன்னத்தை நாலுபாகமாக்கி அதிதிக்காக ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு காத்திருந்தார். எம்பெருமான் முன்போல ஒரு கிழப்ராமணர் போல வந்து அன்னம், ஜலம், படுக்க இடம் கொடுமென்று கேட்டார். சாலிஹோத்ரர் அந்தக் கிழவருக்கு அர்க்ய, பாத்ய ஆசமன்யங்கள் கொடுத்து மிகவும் ஸந்தோஷமாக உபசரித்து, அதிதியாக அன்னத்தை அவருக்குப் பரிமாறினார். அதைப் புசித்துவிட்டு கிழவர் அதிருப்தியாயிருக்கக் காணப்பட்டார். ஆகையால் சாலிஹோத்ரர் முன்போலவே ப்ரீதியாக மற்ற பாகங்களையும் ஆதரவுடன் ஸமர்ப்பித்தார். அக்கிழப்ராமணன் இவற்றையெல்லாம் புசித்துவிட்டு "உம்முடைய உபசாரத்தால் நான் மிகவும் திருப்தியடைந்தேன். சிரமம் தீர படுத்துக்கொள்ள எவ்வுள் ?" என்று கேட்டார். சாலிஹோத்ரர் "இந்த க்ரஹம் தேவரீருடையது தான். இதில் சயனித்துக் கொள்ளலாம். அடியேனும் தேவரீருடைய ஸமீபத்திலேயே இருந்துகொண்டு சிச்ரூஷை பண்ணுகிறேன்." என்று சொல்லிக்கொண்டு பக்கத்திலிருந்தார். அந்தக் கிழப்ராமண ரூபியானவர் தென் திசையில் முடியை வைத்து, வடதிசை பாதம் நீட்டி, சயனித்தருள, துந்துபிவாத்யங்கள் முழங்கின, கந்தர்வர்கள் கானம் செய்தனர், அப்ஸர ஸ்த்ரீகள் நர்த்தனம் ஆடினர், தேவதைகள் புஷ்பமாரி பொழிந்தார்கள், பிரம்மாதி தேவர்களும் ஸனகஸநந்தாதியோகியும் நாரதாதி முனிவர்களும் ஸ்துதி செய்தார்கள். அச்சமயத்தில் பகவான் ப்ரசன்னராய் சாலிஹோத்ர முனிவருக்கு விச்வரூப சேவை ஸாதித்து "ஓய் சாலிஹோத்ரரே! உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும். தருகிறேன்." என்று அருளிச் செய்தார். அந்த ஸ்ரீவத்ஸ கௌஸ்துபதரனைக் கண்டு பேரானந்தமடைந்து பன்முறை விழுந்து நமஸ்கரித்து பரவசமாய் குதித்து

ஸ்ரீவீரராகவஸ்வாமி சயனம்.

கூத்தாடி, ஸ்தோத்ரம் செய்து "தேவரீருடைய ஸான்னித்யத்தைக் காட்டிலும் கேட்கும்படியான வரம் என்ன இருக்கிறது? அடியேனுக்கு ஸேவை தந்தருளியபடியே என்றும் இவ்விடத்தில் எழுந்தருளியிருந்து இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தேவரீரை தரிசிக்கும் பக்தர்களுக்கு இகபரலோக பாக்கியங்களை அனுக்ரஹிக்க வேணும்." என்று ப்ரார்த்தித்தார். பக்தரக்ஷகன் அப்படியே அனுக்ரஹித்து தன் வலதுகரத்தை சாலிஹோத்ரர் திருமுடிமேல் வைத்து அபயப்பிரதானம் செய்து நாபீகமலத்தில் உண்டான சதுர்முகனுக்கு தன் இடது ஹஸ்தத்தால் ஞான முத்திரையுடன் பிரணவப்பொருளை உபதேசித்துக்கொண்டும், தெற்கே சிரஸை வைத்துக்கொண்டு சேஷசயனத்தில் சயனித்தருளினர். பக்தவத்ஸலனான எம்பெருமான் பிரம்மாதி தேவர்களையும் நாரதாதி முனிவர்களையும் பார்த்து, "நாம் சாலிஹோத்ர முனிவரை "படுக்க எவ்வுள் அல்லது கிங்க்ருஹம்" என்று கேட்ட காரணத்தால் இந்த க்ஷேத்திரத்துக்குக் கிங்க்ருஹபுரம் (எவ்வுள்ளூர்) என்றும், நமக்கு கிங்க்ருஹபதி என்றும், எவ்வுள் கிடந்தான் என்றும் திருநாமம் உண்டாகக் கடவது. நானும் இந்த க்ஷேத்திரத்திலேயே வஸிக்கிறேன்." என்று அருளிச் செய்தார். ஸனகஸனந்தனாதி நித்ய சூரிகளும், சேனைநாதன், மற்ற பரிஜனங்களும், சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், கட்கம் ஆகிய திவ்யாயுதங்கள் சரீரதாரிகளாயும் சுற்றிச் சூழ்ந்துகொண்டு உபாஸித்தார்கள்." என்று தேவபாகருக்கு சாலிஹோத்ர முனிவர் சொன்ன இந்த விருத்தாந்தங்களை யெல்லாம் மார்க்கண்டேயர் தெரிந்துகொண்டு, கிருபையால் தன்னை வணங்கி ப்ரார்த்தித்த ஸஹஸ்ரானீக மஹாராஜனுக்கு உபதேசித்தார். அவர் இதைக் கேட்டு மிகவும் திருப்தியடைந்து தானும் அந்த புண்யாவர்த்த க்ஷேத்ரம் சென்று, வீக்ஷாரண்யத்தில் ஹ்ருத்தாபநாசன தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீவீரராகவனைக் கண்ணாரக் கண்டு, ஸேவித்து, அருந்தவம் செய்து, இஹத்தில் இஷ்டமான போகங்களை அனுபவித்து, பரத்தில் மோக்ஷத்தையும் அடைந்தான். பக்தியுடன் இந்த மாஹாத்மியத்தை வாசித்தாலும், வாசிப்பித்தாலும், கேட்டாலும், கேழ்ப்பித்தாலும் புஸ்தகத்தை வீட்டில் வைத்துக் கொண்டிருந்தாலும் மங்களகரமான இஷ்ட ஸித்திகள் உண்டாகும்.

பஞ்ச பர்வ உத்ஸவாதிகள் தவிர விசேஷ உத்ஸவாதிகள்.

சித்திரை மீ:—சைத்ர பிரம்ம உத்ஸவம். 10 நாட்கள். இரண்டு வேளையும் தங்கத்திலுைம் வெள்ளியினுலும் செய்த வாஹனங்களில் வீதி உத்ஸவம். 3-ம் நாள் காலே கருட உத்ஸவம். 7-ம் நாள் திருத்தேர். 9-ம் நாள் காலே சித்திரை நக்ஷத்திரத்தில் திருஎவ்வுள் கிடந்தான், சக்கரத்தாழ்வார் இவர்கள் எழுந்தருளி புஷ்கரணியில் தீர்த்தவாரி. 10-ம் நாள் காலே திருமஞ்சனம் த்வாதசாராதனம். இரவு ஜகஜ்வால்யமான இந்திரவிமான கண்ணுடி பல்லக்கில் விசேஷ உத்ஸவம். மறுநாள் சித்திரா பௌர்ணமி திருவூரல் உத்ஸவம்.

வைகாசி மீ:—வஸந்த உத்ஸவம். 5 நாட்கள். காலேயில் வஸந்த உத்ஸவ பங்களாவுக்கு எழுந்தருளி திருமஞ்சனம் கண்டருளி இரவு புஷ்கரணி பிரதக்ஷணமாய் ஸன்னதிக்கு எழுந்தருளுதல். 5-ம் நாள் சித்திரா நக்ஷத்திரம் இரவு குதிரை வாஹனத்தில் வீதி உத்ஸவம். புஷ்கரணியில் தீர்த்தவாரி. விசாக நக்ஷத்திரம் நம்மாழ்வார் சாத்துமறை.

ஆனி மீ:—அமாவாசை முதல் 3 நாளேக்கு தெப்பல் உத்ஸவம். 3-ம் நாள் காலே பெருமாள் நீர்ஆழி மண்டபத்துக்கு எழுந்தருளி திருமஞ்சனம் திருவாராதனம் தளிகை அமுது செய்து இரவு தெப்பல், திருவீதி உத்ஸவம். சித்திரை நக்ஷத்திரம் பெருமாள், நாச்சிமார், எவ்வுள்கிடந்தான் இவர்கள் கவசம் களேந்து ஜ்யேஷ்டாபிஷேகம். ஸ்வாதி பெரியாழ்வார் சாத்துமறை. பெருமாளுக்கு கருட சேர்வை.

ஆடி மீ:—திரு ஆடிப்பூர உத்ஸவம். பெருமாள் ஆண்டாள் திருவீதி புறப்பாடு. உள் சேர்ந்து ஏகாசனத்தில் ஊஞ்சல்.

ஆவணி மீ:—பௌர்ணமியில் தொடங்கி ஏழு தினங்கள் இரு வேளேகளிலும் பெருமாள் யாகசாலேக்கு எழுந்தருளி ஹோமம் நடக்கிறது. மிகவும் வைதீகமான உத்ஸவம். இரு வேளேகளிலும் பிரபந்த வேதபாராயணங்கள் விசேஷமாய் நடக்கிறது. 7-ம் நாள் இராத்திரி பூர்ணுஹூதி.

புரட்டாசி மீ:—சுக்லபக்ஷ பிரதமை தொடங்கி 9 நாள் உத்ஸவம். காலே கண்ணுடி அறையில் பெருமாள் தாயார் திருமஞ்சனம். இரவு திவ்யாலங்காரங்களுடன் உள் புறப்பாடு.

ஸ்ரீ அஹோபில மடம் ஆதிஸ்தாபகரான ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திரமஹா தேசிகன், கிங்க்ருஹஸ்துதி ஆசிரியர் ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வருஷோத்ஸவமும் சேர்ந்து வருவதால் உத்ஸவங்கள் வெகு அழகாய் நடக்கிறது. கொலு அழகு. கண் கொள்ளாக் காக்ஷி. கேட்டை ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மஹாதேசிகனுக்கும் சிரவணம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுக்கும் விசேஷ வருஷ உத்ஸவ சாத்துமறை.

ஐப்பசி மீ :—தீபாவளி உத்ஸவம்.

கார்த்திகை மீ :—கைசிகதுவாதசி யன்று காலை கைசிக புராண படனம். அன்று முதல் பௌர்ணமி (திருக்கார்த்திகை) இரவு வரை மூலவர் பெருமாளுக்கு தங்ககவசம் சாத்துபடி. இந்த சேர்வை வருஷத்துக்கு ஒரே தடவைதான். ராத்திரி தீபாராதனை, உத்ஸவர் வீதி புறப்பாடு. மூலவர் கவசம் களைந்து சந்தன தைலக் காப்பு.

மார்கழி மீ :—பகல் பத்து 10 நாள். கடைசி நாளன்று பெருமாளுக்கு நாச்சியார் (மோகினி) திருக்கோலம். இராப்பத்து 10 நாள். கடைசி நாள் நம்மாழ்வார் திருவடி தொழல்.

தை மீ :—பிரம்ம உத்ஸவம் 10 நாள். சித்திரை உத்ஸவம் போலவே புறப்பாடுகள். 9-ஆம் நாள் தர்மசேன மஹாராஜா வின் திருநக்ஷத்திரமாகிய பூரட்டாதியில் மங்கள ஸ்நானம் (தீர்த்தவாரி.)

மாசி மீ :—அமாவாசை தொடங்கி 3 நாள். புஷ்கரணியில் தெப்பல்.

பங்குனி மீ :—பல்லவ உத்ஸவம் 5 நாள். ஸ்தலாதிபதி திரு எவ்வுள் கிடந்தான் உத்ஸவம். மாலையில் ஸ்தல புராணம் வாசித்தல். இரவு எவ்வுள் கிடந்தான் சயன உத்ஸவம். திரை திறத்தல். பெருமாள் வீதி புறப்பாடு.

தவன உத்ஸவம். மாலை ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸன்னதி கல்யாண மண்டபத்தில் பெருமாள் தாயார் திருமஞ்சனம். இரவு விசேஷ அலங்காரத்துடன் பத்தி உலாவிசேஷம். புனர்வசு நக்ஷத்திரத்தில் ஆரம்பித்து 3 நாள் விழா.

பங்குனி உத்திரம். இந்த ஒரே நாள்தான் பெருமாள் தாயார் ஸன்னதிக்கு எழுந்தருளி இரவு ஏகாஸனத்தில் சேர்த்தி. விசேஷ உத்ஸவம். மறுநாள் சாயங்காலம்வரை ஏகாஸனத்தில் ஸேவை ஸாதிக்கிறுர்கள். பிறகு உள் பிராகார ப்ரதக்ஷணம்.

கந்தபொடி வஸந்தம், சித்திரை நக்ஷத்திரம். இந்த ஊருக்குக் கிழக்கே 3 மைல் தூரத்திலுள்ள புட்லூருக்கு எழுந்தருளி திருமஞ்சனம் ததீயாராதனம் கண்டருளி இரவு ஆற்றில் திருவூரல்.

குறிப்பு :—பிரதி மாதத்திலும் முக்கியமான உத்ஸவங்கள் மேலே தரப்பெற்றுள்ளன. பஞ்ச பர்வங்கள் உள்பட வருஷத்தில் 200 நாட்களுக்குமேல் உத்ஸவ நாட்கள் ஏற்படுகின்றன. பிரார்த்தனை ஸ்தலமாகையால் அநேக உத்ஸவங்கள் உபயகாரர்களாலேயே நடத்தப்பெறுகின்றன.

ஸ்ரீ அஹோபிலமடம் ஆதீனத்தைச் சேர்ந்த இந்த தேவஸ்தானத்தை பரம்பரை மிராசு தர்மகர்த்தாவான ஸ்ரீ அஹோபிலமடம் அழகியசிங்கர் தன் ஏஜண்டின் மூலம் இந்த தேவஸ்தானத்தைப் பரிபாலித்து வருகிறார்.

திருவெவ்வுளூர் திவ்ய க்ஷேத்திரம் சென்னைக்கு 26 மைல் தூரத்திலிருக்கிறது. அநேக சத்திரங்களும் ஹோட்டல்களுமிருக்கின்றன. தேவஸ்தானத்தில் பிரசாதம் கிடைக்கும். யாத்ரீகர்களுக்கு அநேக பஸ் வசதிகளும் ஜட்கா வண்டிகளும் சௌகரியமாய் கிடைக்கும்.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

பெரிய திருமொழி.

இரண்டாம் பத்து. இரண்டாந் திருமொழி.



காசையாடை மூடியோடிக் காதல் செய்தானவனூர்
நாசமாக நம்பவல்ல நம்பி நம் பெருமான்
வேயினன்ன தோள்மடவார் வெண்ணெயுண்டான் இவனென்று
ஏசநின்ற எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (1)

[காசைஆடை - காஷாய வஸ்த்ரத்தினல்; மூடி - உடம்பை மறைத்துக்கொண்டு; ஓடி - (பஞ்சவடிக்கு) ஓடிவந்து; அவன் - இராவணனுடைய; ஊர் - ஊராகிய இலங்கை; நம்பவல்ல - ஸங்கல்பித்த; நம்பி - பரிபூர்ண சக்தியையுடையவனும்; வேயின் அன்ன - மூங்கிலோடு ஒத்த; மடவார் - ஆய்ச்சியர்; ஏச - பரிஹஸிக்குமாறு; எவ்வுள் - திருவெவ்வுளூரில்; கிடந்தான் - திருக்கண்வளர்ந்தருளா நின்ருன்.]

தையலாள்மேல் காதல் செய்ததானவன் வாளரக்கன்
பொய்யிலாத பொன்முடிகள் ஒன்பதோடொன்றும் அன்று
செய்தவெம் போர்தன்னில் அங்குஓர் செஞ்சரத்தால் உருள
எய்தஎந்தை எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (2)

[தையலாள் - அழகிற் சிறந்த பிராட்டி விஷயத்திலே; காதல்

செய்த - காமங்கொண்ட ; தானவன் - ஆஸுரப்ரக்ருதியாய் ; வாள் அரக்கன் - சிவனை ஆராதித்துப் பெற்ற வாளாயுதத்தையுடைய வனான இராவணனுடைய ; பொய்இலாத - உண்மையான ; ஒன்ப தோடுஒன்று - பத்தையும் ; அன்று அங்கு - முன்பு இராமாவதாரத் திலே கடற்கரையில் ; வெம்போர் - கோரமான யுத்தத்திலே ; ஓர் - ஒப்பற்ற ; செம்சரத்தால் - சிவந்த பாணத்தினாலே ; உருளஎய்த - உருட்டின.]

முன்ஓர் தூது வானரத்தின் வாயில்மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாளமுனிந்து அவனே
பின்ஓர் தூது ஆதிமன்னர்க்காகி பெருநிலத்தார்
இன்னார் தூதனெனநின்றான் எவ்வுள் கிடந்தானே. (3)

[முன் - இராமாவதாரத்திலே ; வானரத்தின் வாயில் - சிறிய திருவடி மூலமாக ; மொழிந்து - சொல்லியனுப்பி ; அரக்கன் - இராவணனுடைய ; மன்ஊர் - சிறந்த லங்காபுரியை ; வாளி - அம்பு ; மாள - மாண்டுபோம்படி ; முனிந்து - சீறிமுடித்து ; ஆதி மன்னர்க்கு - அரசர்க்கரசரான பாண்டவர்களுக்கு ; ஓர் தூதுஆகி - விலக்ஷணனான தூதனாய் ; பெருநிலத்தார் - பெரிய பூமியில் உள்ளார் எல்லாரும் ; இன்னார் தூதன் - பாண்டவதூதன்.]

பந்தணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்
வெந்திற லேறேழும் வென்றவேந்தன் விரிபுகழ்சேர்
நந்தன் மைந்தனாக வாகும்நம்பி நம்பெருமான்
எந்தை தந்தை தம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (4)

[பந்துஅணைந்த - பந்து பொருந்திய ; பாவை - சித்திரப் பதுமைபோல அழகியவளும் கண்மணிப்பாவைபோல் அருமை யானவளும் ஆகிய நப்பின்னைப் பிராட்டி ; வெம்திறல் - குரூரமான மிடுக்கையுடைய ; ஏறுஏழும் - ஏழு ரிஷபங்களையும் ; வென்ற வேந் தன் - வென்றுமுடித்த அரசனும் ; விரிபுகழ்-உலகமெங்கும் பரந்த; நந்தன் - நந்தகோபனுக்கு ; மைந்தன் - திருக்குமாரனாக ; நம்பி - பரிபூரணன் ; எந்தை தந்தை தம்பெருமான் - நம் குலத்துக்கெல் லாம் நாதனுமானவன்.]

பாலனாகி ஞாலமேழும் உண்டு பண்டு ஆலிலைமேல்
சாலநாளும் பள்ளிகொள்ளும் தாமரைக் கண்ணன் எண்ணில்
நீலமார் வண்டுண்டு வாழும் நெய்தலந் தண்கழனி
ஏலநாறும் பைம்புறவில் எவ்வுள் கிடந்தானே. (5)

[பாலன்ஆகி - சிறுகுழந்தையாய்; ஞாலம் ஏழும் - உலகங்களை யெல்லாம் ; உண்டு - திருவயிற்றிலே வைத்து ; ஆல்இலை - ஆலந் தளிரின் ; சாலநாளும் - வெகுநாள் வரையில் ; பள்ளிகொள்ளும் - சயனித்திருந்த ; தாமரைக் கண்ணன் - புண்டரீகாக்ஷன் ; எண் இல் - எண்ணிறந்த ; நீலம் - நெய்தற் பூவிலே ; உண்டு - பூக்களில் உள்ள தேனைப் பருகி; அம்தண் - அழகிய குளிர்ந்த ; ஏலம்நாறும் - பரிமளம் கமழ்கின்ற ; பைபுறவில் - பரந்த சோலை களையுமுடைய.]

சோத்தநம்பி யென்று தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும்
ஆத்தனம்பி செங்கணம்பி ஆகிலும் தேவர்க்கெல்லாம்
மூத்தநம்பி முக்கணம்பி என்று முனிவர்தொழுது
ஏத்தும்நம்பி எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (6)

[நம்பிசோத்தம் - ஸ்வாமி ! உனக்கு அஞ்சலி ; தொண்டர் - அடியவர்கள் ; மிண்டி - நெருக்கமாகத் திரண்டு ; அழைக்கும் - துதிக்கப்பெற்ற ; ஆத்தன் - ஆப்தனான ; முனிவர் - ஸநகர் முதலிய ரிஷிகள் ; மூத்தநம்பி - பிரமனே; முக்கண் நம்பி - சிவனே; தொழுது - வணங்கி.]

திங்களப்பு வானெரி காலாகி திசை முகனார்
தங்களப்பன் சாமியப்பன் பாகத்திருந்தவண்டுண்
தொங்கலப்பு நீள்முடியான் சூழ்கழல் சூடநின்ற
எங்களப்பன் எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (7)

[திங்கள் - சந்திரன் ; அப்பு - ஜலம் ; வான் - ஆகாசம் ; எரி - தேஜஸ் ; கால் - வாயு ; திசைமுகனார் - பிரமன் ; அப்பன் - தந்தை ; சாமிஅப்பன் - ஸாம வேதத்தால் பிரிதிபாதிக்கப்பெற்ற ஸ்வாமி ; பாகத்து - தனது திருமேனியின் ஒரு பக்கத்திலே ; வண்டு உண்தொங்கல் - வண்டுகள் மதுபானம் பண்ணப்பெற்ற

கொன்றை மாலையையும்; அப்புநீள்முடியான் - கங்கா ஜலத்தை யும் நீண்ட சடையிலேயுடையவனை சிவபிரான்; சூழ்கழல் சூடநின்ற - விசாலமான திருவடிகளைத் தன் தலைமீது அணிந்து கொள்ளும்படியிருப்பவனும் உள்ள.]

முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த
புனிதன்பூவைவண்ணன்அண்ணல்புண்ணியன்விண்ணவர்கோன்
தனியன் சேயன் தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியன் எந்தை எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (8)

[முனிவன் - உலகங்களைப் படைக்க ஸங்கல்பம் செய்தவனும்; மூர்த்திமூவர் - பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மூன்று மூர்த்தி; வேதம்விரித்து - வேதப் பொருள்களை வியக்தமாக; உரைத்த புனிதன் - வெளியிட்ட பவித்திரன்; பூவைவண்ணன் - காயாம் பூவைப்போன்ற நிறத்தையுடையவன்; அண்ணல் - ஸர்வ ஸ்வாமி; புண்ணியன் - வடிவுகொண்ட புண்ணியமானவன்; விண்ணவர்கோன் - நித்ய ஸூரிகளுக்குத் தலைவன்; தனியன் - 'ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம' என்று உபநிடதத்தில் ஓதப் பெற்றவன்; சேயன் - எட்டாதவன்; இனியன் - பரம போக்யனு யிருப்பவன்; எம்பெருமான் - ஸ்வாமி.]

பந்திருக்கும் மெல்விரலாள் பாவை பனிமலராள்
வந்திருக்கும் மார்வன் நீலமேனி மணிவண்ணன்
அந்தரத்தில் வாழும் வானோர் நாயகனாயமைந்த
இந்திரற்கும் தம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. (9)

[பனிமலராள் பாவை - குளிர்ந்த தாமரைப் பூவைப் பிறப்பிட மாகவுடைய பிராட்டி; வந்து இருக்கும் மார்வன் - வந்து தங்கி வாழ்கின்ற திருமார்பையுடையவன்; நீலம்மேனி மணிவண்ணன் - நீலமான நிறத்தையுடைய மணியின் வர்ணம் போன்ற வர்ணத்தை யுடையவனாய்; அந்தரத்தில் - சுவர்க்கத்தில்; வானோர் நாயகன் - தேவநாதன்; தம்பெருமான் - ஸ்வாமி.]

இண்டைகொண்டு தொண்டரேத்த எவ்வுள் கிடந்தானை
வண்டுபாடும் பைம்புறவின் மங்கையர்கோன் கலியன்

கொண்டசீரால் தண்தமிழ் செய்மாலை ஈரைந்தும் வல்லார்
அண்டமாள்வது ஆணைஅன்றேல் ஆள்வர் அமருலகே. (10)

[இண்டைகொண்டு - புஷ்ப மாலைகள் ஏந்திக்கொண்டு; ஏத்த - துதிக்கும்படியாக; எவ்வுள் கிடந்தானை - திருவெவ்வுளூரில் சயனித்தருள்பவனான பெருமான் விஷயமாக; பாடும் - களித்துப் பாடா நின்ற; மங்கையர்கோன் - திருமங்கையிலுள்ளார்க்கு ஸ்வாமியான ஆழ்வார்; கொண்ட சீரால் - நெஞ்சிலே கொண்ட பகவத் குணங்களாலே; தண்தமிழ் செய் - அழகிய தமிழ்ப் பாஷையில் அருளிச்செய்த; மாலை - சொல்மாலையாகிய; ஈர்ஐந்தும் - இப்பத்துப் பாசுரங்களையும்; வல்லார் - ஓதவல்லவர்கள்; அண்டம் ஆள்வது - இந்த ப்ரஹ்மாண்டங்களையெல்லாம் செங்கோல் செலுத்தி ஆளப் பெறுவது; ஆணை - திண்ணம்; அன்றேல் - இவ்வுலகங்களை ஆள்வதில் ஆசையற்றவர்களாகில்; அமர் உலகு ஆள்வர் - பரமபதந்தன்னையே ஆளப் பெறுவார்கள்.]

திருமழிசையாழ்வார் மங்களாசாஸநம்.

இயற்பா. நான்முகன் திருவந்தாதி.

நாகத்தணைக் குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்த னவான். (36)

[நாகத்து அணை - திருவநந்தாழ்வானுகிற படுக்கையின் மேலே; அரங்கம் - திருவரங்கம்; ஆதி நெடுமால் - ஜகத்காரண பூதனுன ஸர்வேச்வரன்; கிடக்கும் - பள்ளிகொண்டிருக்கின்றுன்; அணைப்பார் - அன்பருடைய; கருத்தன் - நெஞ்சில் புகுந்தவன். திருக்குடந்தை, திருவெஃகா, திருவெவ்வுளூர், தென் திருவரங்கம், திருப்பேர்நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய ஏழுதலங்களில் நாகத்தணையில் கிடந்தருள்வது அன்பருடைய இதயத்திலே புகுருகைக்கு அவஸரப் ப்ரதீக்ஷையாலே என்க.]

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

நீர்மைகெட வைதாரு நின்னே டெதிர்த்தாருஞ்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்க்கையினு—னேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் மிகையைப்பொ றுத்தருளி
யெவ்வுளத்த னேநீ யிரங்கு. (90)

[திருவெவ்வுளூர் என்னுந் திவ்விய தலத்தில் எழுந்தருளிய தலேவனே! தேவரீர் தமது தன்மை அழியும்படி தேவரீரை நிந்தித்தவரும், தேவரீரோடு எதிர்த்துப் போர் செய்தவரும், தாங்கள் செய்த அபராதத்தினுல் அழிந்துபோகாமல் சிறப்பு அடையும்படி தேவரீரது திருவடிகளிற் சேர்தலினுலே நல்ல குணமில்லாத கொடிய சிந்தனேயையுடைய அடியேன் செய்த குற்றங்களேயும் தேவரீரது திருவருளினுற் பொறுத்துக் கொண்டு, அடியேன் திறத்தில் திருவுள்ளம் இரங்கி தேவரீருக்கு ஆட்கொள் வீராக.]

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீ வீரராகவஸுப்ரபாதம்.

தேவித்ரயீசிகரசேகர திவ்யரூபே !
ஸ்ரீசார்ங்க யுரஸ்தலநிவாஸ நிதாந்தத்ருப்தே !,
வாசாமகோசர விசித்ர சரித்ரயுக்தே !
ஸ்ரீகிங்க்ருஹேச தயிதே ! தவ ஸுப்ரபாதம். (1)

மாதஸ்ஸமஸ்தஜகதாம் மதுஜிந்மநோஜ்ஞே !,
மாநாதிகாமலகுணே மஹநீய சீலே !,
முராரிமுக்யமருதாநத பாதபத்மே !
ஸ்ரீகிங்க்ருஹேச தயிதே ! தவ ஸுப்ரபாதம். (2)

தாபத்ரயாதுரஜநாவந ஜாகரூகே !
தாரஸ்ஸுரத்விவிதரத்ந ஸுதீப்ரபூஷே !,
தத்வஜ்ஞதேசிகஹ்ருதம்புஜ நித்யவாஸே !
ஸ்ரீகிங்க்ருஹேச தயிதே ! தவ ஸுப்ரபாதம். (3)

ஆர்த்ராபராதிநி நிக்ருஷ்டதமேபிஜந்தௌ
பூத்வா க்ருபார்தஹ்ருதயா பரிபாஸிதம்த்வம்,
காந்தேந்துபிம்பவதநே கமலா கலாட்யே !
ஸ்ரீகிங்க்ருஹேச தயிதே ! தவ ஸுப்ரபாதம். (4)

ஈஷத் த்வதீய கமநீய கடாக்ஷபாதாத்
ப்ராப்நோதி ஜந்துரமிதாம் ச்ரியமப்ஜஜார்த்யாம்,
ஹேதேவி ! தே மஹிரஹோ ஸகலாபிநந்த்ய:
ஸ்ரீகிங்க்ருஹேசதயிதே ! தவ ஸுப்ரபாதம். (5)

ஸர்வேச்வரோபி தவ தேவி கடாக்ஷவீக்ஷா
லேசாத் ஸ்வமாத்தவிபவம் மநுதே முராரி:,
பூமாச்ருதேர விஷயஸ்தவகேந வேத்ய:
ஸ்ரீகிங்க்ருஹேச தயிதே ! தவ ஸுப்ரபாதம். (6)

ஹேதேவதேவ ! நிகமாந்தவசோவிசேய
கல்யாண திவ்யகுணபூர்ண கரீந்த்ரபந்தோ !,
த்ரைலோக்ய ஸர்க பரிபாலந பங்கஹேதோ !
ஸ்ரீகிங்க்ருஹேச ! பகவம் ஸ்தவ ஸுப்ரபாதம். (7)

த்ராணாய ஸாது விததே ரஸதாம் விஹத்யை
குப்த்யைச தர்மநிவஹஸ்ய ஸநாதநஸ்ய !,
காருண்யத: கலிதவாந் விவிதாவதாராம்
ஸ்தவம் கிங்க்ருஹேச ! பகவம் ஸ்தவ ஸுப்ரபாதம். (8)

ராமாவதார ஸமயே விநிஹத்ய சூத்ரம்
சம்பூகமுக்ரதபஸம் த்விஜபாலகுப்த்யை:,
துர்கேசர ஸ்துதித ச்ரமஹாந யே கிம்
சேஷேத்ர கிங்க்ருஹபதே ! தவ ஸுப்ரபாதம். (9)

ஸ்ரீதர்மஸேந தநயாம் பரிணேதுகாம:
ஸ்வீக்ருத்ய ஸுந்தரவபு:பரிணீய தாம்த்வம்,
தல்லீலயா ச்ரமயுதோ புஜகேசதல்பே
சேஷேவ கிங்க்ருஹபதே ! தவ ஸுப்ரபாதம் (10)

ஈசோ நிக்ருத்ய விதிமஸ்தமகக்ரஹீத
ஸ்தீர்த்தாந்யடந்நபி ததோ நவிமுக்த அத்ர,
ஸ்நாத்வா ஸரஸ்யத நிஷேவ்ய பவந்தமஸ்மாந்
முக்தோபவத்ரகுபதே ! தவ ஸுப்ரபாதம். (11)

யே புஷ்யதர்சதிவஸே நிஜகாமிதாப்த்யே
பிஷ்டப்ரதீபபரிகல்ப நதோ பஜந்தே,
தேஷாம் யதேஷ்டமநிசம் விதநோஷிபத்ரம்
த்வம் கிங்க்ருஹேச ! பகவம் ஸ்தவ ஸுப்ரபாதம். (12)

பாஸ்வா நுதேதி பரித: கிரணாந்விவ்ருண்வந்
தூரேபஸர்பதி நிசோத்ததம: கதம்ப:,
அம்போருஹாணி விகஸந்த்யமலாநி வாரி
ஸ்ரீவீரராகவ விபோ ! தவ ஸுப்ரபாதம். (13)

வ்யாஸாதிமாமுநிகணஸ்ஸமுபாஸ்ய ஸந்த்யாம்
ஸம்ஸேவிதும் நிகமப்ருந்தவிபூஷணம் த்வாம்,
ஆயாந்தி சுத்தமநஸ: பரபக்திநிஷ்டா:
ஸ்ரீவீரராகவ விபோ தவ ஸுப்ரபாதம். (14)

ப்ரஹ்மேந்த்ர ருத்ர தநதப்ரமுகாச்ச தேவா:
ஸத்ரீபிர்நிஜாநுகுண கிங்கரதா ரதாபி:,
திஷ்டந்தி ஸேவிதுமநர்க்கநவோபஹாரா:
ஸ்ரீவீரராகவவிபோ ! தவ ஸுப்ரபாதம். (15)

ஸ்ரீநாரதோபி மஹதீம் பரிக்ருஹ்ய ஹஸ்தே
ஸ்வஸ்ய ப்ரியேணஸஹ தம்புருணப்யுபைதி,
த்வாம் ஸௌகாசாயநிக ஏதி ப்ருகுர்மஹர்ஷி:
ஸ்ரீகிங்க்ருஹேச ! பகவம்ஸ்தவ ஸுப்ரபாதம். (16)

ஸ்ரீசாலிஹோத்ர முநிராகலயந் ஸ்வமஸ்தே
த்வத்தஸ்தபத்மமமலேர் வசநைஸ்தவீதி,
சண்டாதயச்ச ஜயசப்தமுதீரயந்தி
ஸ்ரீகிங்க்ருஹேச்வரவிபோ ! தவ ஸுப்ரபாதம். (17)

திவ்யத்வதீய சுபவிக்ரஹ ஸேவநோத்க:
த்வத்ஸந்நிதௌ ப்ரதிவஸந்நிகமாந்தஸூரி:,
ஸ்வோக்தாம் ஸ்துதிம் தவ மநஸ்யநுஸந்ததாநோ
பாபாதி கிங்க்ருஹபதே ! தவ ஸுப்ரபாதம். (18)

ஸௌவர்ணதண்டயுதசாமரயுக்மஹஸ்தா
ஸ்ரீராகவேதி தவ நாம முஹுர்வதந்த:,
ப்ருத்யாஸ்த்வதாலயஜ கிங்கர தாநியுக்தா:
திஷ்டந்தி கிங்க்ருஹ பதே ! தவ ஸுப்ரபாதம். (19)

துங்காஸ்துரங்கநிவஹாச்சுபலக்ஷ்மயுக்தா:
மத்தா மதங்கஜகணச்ச புரோ லஸந்தி,
தேநுச்ச ஸுந்தரதநு: ப்ரவிபாதிசாக்ரே
ஸ்ரீவீரராகவவிபோ ! தவ ஸுப்ரபாதம். (20)

ஹம்ஸாச்சரந்தி வரடாஸஹிதா: ப்ரபுத்ய
புல்லேஷு பத்மநிவஹேஷு பஹுப்ரமோதா:,
மத்தாமயூர சுககோகிலசாரிகாச்ச
கூஜந்தி கிங்க்ருஹபதே! தவ ஸுப்ரபாதம். (21)

யோஷா விசிஷ்டமணிபூஷண பூஷிதாம்க்ய:
ஸ்நாத்வா மஹார்ஹவரவஸ்த்ர தராஸ்ஸுவேஷா:,
ஹஸ்தார்ப்பிதோபஹ்ருதயஸ்தவ ஸத்மபாகே
திஷ்டந்தி கிங்க்ருஹபதே! தவ ஸுப்ரபாதம். (22)

இதி கிங்க்ருகேச விஷயம் மநோஹரம்
வரஸுப்ரபாத மநிஷம் படந்தி யே,
இஹபோக ஜாதமமரேச்வரார்த்திதம்
க்ருபயா பஜந்தி பரமம் ரகுப்ரபோ:. (23)

ஸ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிக விரசிதா

கிம்க்ருஹேசஸ்துதி:

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:
கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்ய வர்யோமே
ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி.

அயத்ந ஸங்கல்பித ஸர்வலோக
ஸர்காபவர்கஸ்திதி ஸம்விதாநம்,
அநாதி மத்யாந்த மசேஷநாதம்
கிம்க்ரேஹநாதம் சரணம் பஜாமி. (1)

அக்ருத்த்ரிமாநாம் வசஸாமபூமி
மகோசரம் ப்ரஹ்ம சிவாதிவாசாம்,
அஹம்ஸ்துவே கிம்க்ருஹ நாயகத்வாம்
ததாஹ்ய லஜ்ஜந் ஸ்துமிதம்பசோக்தி:. (2)

அகிஞ்சநோ நந்யகதி ஸ்த்வதீய
ஸ்துதிம் கரோமீதி மதிம்கரோமி,
க்ருபாநிதே கிம்க்ருஹ நாயகாத்ய
த்வமேவ மேவாச முதீரயேதா:. (3)

த்வயைவ தத்தாமுபலப்ய வாணீ
மணீயஸீம ப்ரதிம ப்ரபாவம்,
ப்ரஸாதயே கிம்க்ருஹ நாயகத்வாம்
நசேத்குதோமே ஸபலம் வசஸ்ஸ்யாத். (4)

அநேந ஜீவேந ஸமஸ்த வஸ்து
ப்ரவிச்ய நாமாநிச ரூபபேதை:,
வ்யாக்ருத்ய வீக்ஷா வநமத்ய பாகே
விபும் சயாநம் ஸததம் பஜாமி. (5)

அசேஷபும்ஸாம் ஹ்ருதிஸந்நிவிஷ்ட
மநல்பசக்த்யாதி குணைர்விசிஷ்டம்,
ஹ்ருத்தாப ஹ்ருத்பங்கஜ ப்ருங்கஜுஷ்டம்
தேவம் பஜே கிம்க்ருஹகம்மமேஷ்டம். (6)

ஸ்ரீசாலிஹோத்ரார்பித சாலிபிஷ்ட
ஹ்ருஷ்டோபவாந் தேவசயிஷ்ணுரேநம்,
கிம்ஹேகமத்ரேதி யதாவதத்தத்
கிம்ஹேகமாஸீத் தவஸத்மநாம்நா. (7)

பத்மாமஹீ லாலித பாத பத்மம்
பத்மாஸநா திஷ்டித நிம்ந நாபிம்,
சயாந மாக்ரம்ய புஜங்க தல்பம்
கிம்ஹேக ஸத்மாந மஹம் நதோஸ்மி. (8)

விஸ்மே ரமாஸீத் புவநம் த்வதீய
சரித்ர மந்வீக்ஷ்ய சிரப்ரவ்ருத்தம்,
கிம்கேஹ நாதா ஸுரகைட பாதி
நிபர்ஹ ணுர்த்தம் கிலஸர்வ சக்தே. (9)

கங்காதி தீர்த்தாநி நிஷேவ்ய சம்புஸ்
ஸர்வாணி புண்யாயத நாநி கத்வா,
அமுக்த பூர்வோ விதிஹத்ய யாத்வாம்
ஸம்ஸேவ்ய கிம்கேஹ பதே விமுக்த:. (10)

அஜஹ்நு ஜாநோத்ய மஹாப ராதம்
த்விஜம்ஹி ஹ்ருத்தாப ஹரம் ஸரஸ்தே,
அதீத ரக்தௌ சிகமத்புதம் த்வத்
ப்ரபாவத: கிம்க்ருஹ நாதநை தத். (11)

ரகுப்ரவீரஸ்ய தவார்ஹமேத
த்யதாகத ஸ்யைவ ரிபோர்ஜிகாம்ஸோ:,
விதூய ரக்ஷஸ் த்வமமுஷ்ய திவ்ய
மதா:பதம் கிம்க்ருஹ நாயகத்வம். (12)

பிஷ்ட ப்ரதீபாந் பரிகல்ப யேத்வாம்
ஹ்ருஷ்டா பஜம்தேஹநி புஷ்யதர்சே,
இஷ்ட ப்ரதாயீ விதநோஷி தேஷாம்
அஷ்டோப போக்யா ந்யபி காம்க்ஷிதாநி. (13)

விகாஸயந் மாநஸ பங்க ஜாநி
விபச்சிதாம் நிச்சல பக்தி பாஜாம்,
ப்ராதுர்பவந் நாஸூர கைட பாதி
தமோ ரவேத்வம் மயி ஸுப்ரஸீத. (14)

ப்ரத்யும்ந நாம்நே தபஸாம்ஹி தாம்நே
க்ருபா ப்ரஸந்நே த்வயி கிம்க்ருஹேச,
கங்காதிகத்வம் நகிமாபதீர்த்தம்
ஹ்ருத்தாபகம்வா தநயம்நவந்த்யா. (15)

த்வம் ஸர்வவித்த்வம் கமலாஸஹாய
ஸ்த்வமேவ வேதாந்த வசோவிசேய:,
பவம்தமேதம் சரணம் ப்ரபந்நா
வயம் நயஸ்மாத் பரமஸ்திதைவம். (16)

புராண பும்பாவ மஹோவிகூஹ்ய
யுவத்வமேவா கலயந் ஸ்ரூபம்,
உபாயமஸ்த்வம் கிலதர்ம ஸேந
ஸ்தாம் நதாம்கீமிஹ கிம்க்ருஹேச. (17)

ஸ்ரீபூமி லாலிதபதம் ச்ரிதசேஷ தல்பம்
கல்பாந்த யோக்ய புவநாவந யோக நித்ரம்,
ஸ்ரீசாலிஹோத்ர சிரஸாத்ருத ஹஸ்த பத்மம்
ஸ்ரீவீரராகவ விபும் ச்ரயதாம் மநோமே. (18)

வேங்கடேச கவிநா விநிர்மிதாம்
கிம்க்ருஹாதிபதி ஸம்ஸ்துதிம் படந்,
திவ்யபோக முபபுஜ்ய மாநவோ
பவ்யரூப மவலோகயேத் ப்ரபோ:. (19)

கவிதார்க்கிக ஸிம்ஹாய
கல்யாண குணசாலிநே,
ஸ்ரீமதே வேங்கடேசாய
வேதாந்த குரவேநம:.

ஸ்ரீயெநம:

ஸ்ரீரகுநந்தநபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேதிகன் அருளிச்செய்த

ரகுவீரகத்யம்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:
கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்ய வர்யோமே
ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதீ.

ஜயத்ராச்ரித ஸந்த்ராஸ
த்வாந்தவித்வம் ஸநோதய:,
ப்ரபாவாந் ஸீதயாதேவ்யா
பரமவ்யோம பாஸ்கர:.

ஜயஜயமஹாவீர,

மஹாதீரதௌரய,

தேவாஸுர ஸமரஸமய ஸமுதித நிகிலநிர்ஜர நிர்தாரித நிரவதிக மாஹாத்ம்ய,

தசவதநதமித தைவதபரிஷதப் யர்திததாசரதி பாவ,

திநகரகுல கமலதிவாகர,

திவிஷததிபதி ரணஸஹசரண சதுரதசரதசரமரிணவிமோசந கோஸல ஸுதாகுமார பாவகஞ்சுகித காரணாகார,

கௌமாரகேளி கோபாயிதகௌசிகாத்வர,

ரணுத்வரதுர்ய பவ்ய திவ்யாஸ்த்ரப்ருந்த வந்தித,

ப்ரணத ஜநவிமத விமதநுதுர்லலித தோர்லளித,

தநுதரவிசிக விதாடநவிகடித விசராருசராருதாடகாதாடகேய,

ஜடகிரணசகலதர ஜடிலசட பதிமகுட தடநடநபடு விபுத ஸரிததி பகுளமதுகள நலளிதபத நளிநரஜ உபம்ருதித நிஜவ்ருஜிந ஜஹதுபல தநுருசிரபரமமுநிவர யுவதிநுத குசிகஸுகதித விதித நவவிவிதகத,

மைதில நகர ஸுலோசநா லோசநசகோர சந்த்ரகண்ட பரசு கோதண்ட ப்ரகாண்டகண்டந சௌண்டபுஜதண்ட சண்டகர கிரணமண்டல போதித புண்டரீக வநரு சிலும்டாகலோசந,

மோசித ஜநகஹ்ருதய சங்காதங்க,

பரிஹ்ருதநிகில நரபதி வரண ஜநகதுஹித்ருகுசதட விஹரண ஸமுசிதகரதல,

சதகோடி சதகுண கடிந பரசுதரமுநி வரகரத்ருததுரவநமித நிஜதநு ராகர்ஷண ப்ரகாசித பாரமேஷ்ட்ய,

க்ருதுஹா சிகரிகந்துக விஹ்ருதிமுகஜ கதருந்துதஜி தஹரிது தந்த கந்துரோதந்த தசவதநதமநகுசல தசசதபுஜமுக ந்ருபதிகுல ருதிரத்தர பரிதப்ரது தரதடாக தர்பித பித்ருகப் ருகுபதி ஸுகதிவிஹதிக ரநத பருடிஷுபரிக,

அந்ருத பயமுஷித ஹ்ருதயபித்ரு வசநபால நப்ரதிஜ்ஞாவஜ் ஞாத யௌவராஜ்ய,

நிஷாதராஜ ஸௌஹ்ருத ஸுசித ஸௌசீல்ய ஸாகர,

பரத்வாஜசாஸந பரிக்ரஹீத விசித்ர சித்ரகூடகிரி கடகதடரம் யாவஸத அநந்ய சாஸநீய,

ப்ரணதபரத மகுடதட ஸுகடித பாதுகாக்ர்யாபிஷேக நிர்வர்தித ஸர்வ லோக யோக க்ஷேம,

பிசிதரு சிவிஹித துரிதவல மதநதநய பலிபுகநு கதிஸரப ஸசய நத்ருண சகலபரிபத நபயசகித ஸகல ஸுரமுநி பஹு மத மஹாஸ்த்ர ஸாமர்த்ய,

த்ருஹிண ஹரவலமத நதுராரக்ஷ சரலக்ஷ தண்டகாதபோவந ஜங்கம பாரிஜாத விராத ஹரிணசார்தூல,

விலு லிதபகுபல மககள மரஜநீ சரம்ருக ம்ருகயாரம்ப ஸம்ப்ருத சீரப்ருதநு ரோத,

த்ரிசிரச்சிர ஸ்த்ரிதயதிமிர நிராஸ வாஸரகர,

தூஷண ஜலநிதி சோஷணதோஷித ரிஷிகண கோஷித விஜய கோஷண,

கரதர கரதரு கண்டந சண்ட பவந,

த்வி ஸப்தரக்ஷஸ்ஸஹஸ்ரநஇவ நவிலோல நமஹாகளப,

அஸஹாய சூர,

அநபாய ஸாஹ,

ஸமஹித மஹாம்ருத தர்சநமுதித மைதிலீத்ருடதர பரிரம்பண விபவ விரோபித விகடவீரவ்ரண,

மாரீச மாயாம்ருகசர்ம பரிகர்மித நிர்பரதர்பாஸ்தரண,

விக்ரமய சோலாபவிக்ரீத ஜிவித க்ருத்ரராஜதேஹதி தக்ஷாலக்ஷித பக்த ஜந தாக்ஷிண்ய,

கல்பித புதபாவக பந்தாபிநந்தித,

அவந்த்ய மஹிம முநிஜநபஜநமுஷித ஹ்ருதயகலுஷ சபரீமோக்ஷ ஸாக்ஷீபூத,

ப்ரபஞ்ஜந தநயபாவுக பாஷித ரஞ்ஜித ஹ்ருதய,

தரணி ஸுத சரணுகதி பரதந்த்ரீ க்ருத ஸ்வாதந்த்ரிய,

த்ருடகடித கைலாஸ கோடி விகடதுந்துபி கங்காள கூடதூர விக்ஷேபதக்ஷ தக்ஷிணேதர பாதாங்குஷ்டதர சலநவிச்வஸ்த ஸுஹ்ருதாசய,

அதிப்ருதுல பஹுவிடபி கிரி தரணி விவரயுகபதுதய விவ்ருத சித்ரபுங்க வைசித்ரிய,

விபுலபுஜ சைலமூல நிபிடநி பீடித ராவணரண ரணகஜநக சதுருததி விஹரண சதுர கபிகுலபதி ஹ்ருதய விசாலசிலா தல தாரண தாருணசீல முக,

அபார பாராவார பரிகா பரிவ்ருத பரபுர பரிஸ்ருத தவதஹந ஜல நபவ நபவகபிவர பரிஷ்வங்க பாவித ஸர்வஸ்வதாந,

அஹித ஸஹோதரரக்ஷ: பரிக்ரஹ விஸம்வாதி விவித ஸசிவ விப்ரலம்ப ஸமய ஸம்ரம்ப ஸமுஜ் ஜ்ரும்பித ஸர்வேச்வர பாவ,

ஸஹ்ருத் ப்ரபந்ந ஜந ஸம்ரக்ஷண தீக்ஷித வீர ஸத்யவ்ருத ப்ரதி சயந பூமிகா பூஷித பயோதி புளிந,

ப்ரளய சிகி பருஷ விசிகசிகா சோஷிதா கூபாரவாரிபூர ப்ரபல ரிபுகல ஹருது கசடுல கபிகுல கரதலதுலித ஹ்ருதகிரி நிகர ஸாதித ஸேது பதம ஸீமஸீமந்தித ஸமுத்ர,

த்ருத்கதி தரம்ருக வளுதி நீ நிருத்த லங்காவரோத வேபதுலாஸ்ய லீலோபதேச தேசிக தநுர் ஜ்யாகோஷ ககநசர கநககிரி கரிமதர நிகமமய நிஜகருட தநிலலவ களித விஷவதந சரகதந,

அக்ருதசரவ நசரரணகரண வைலக்ஷ்ய சோணிதாக்ஷ பஹு விதரக்ஷேபாப லாத்யக்ஷவக்ஷ:,

கவாசபாடநபடி மஸாடோப கோபாவலேப கடுரதடநீடம் க்ருதி சடுல கடோர கார்முக,

விசங்கட விசிகவிதாடந விகடித மகுட விஹ்வல விச்ரவஸ்தநய விச்ரமஸமய விச்ராண நவிக்யாத விக்ரம,

கும்பகர்ண குலகிரிவிதள நதம்போளி பூதநிச்சங்ககங்கபத்ர அபிசரண ஹுதவஹ பரிசரண விகடந ஸரபஸபரிபததபரி மிதகபிபல ஜலதிலஹரிகலகல ரவகுபிதமகவ ஜிதபிஹநநக்ரு தநுஜ ஸாக்ஷிகராக்ஷஸ த்வந்த்வயுத்த,

அப்ரதி த்வந்த்வபௌருஷத்ரியம் பகஸமதிககோரஸ்த்ராடம்பர,

ஸாரதி ஹ்ருதரத ஸத்ரபசாத்ர வஸத்யாபித ப்ரதாப,

சிதசரக்ருதலவநத சமுக முகதச்க நிபதந புநருதய தரகளித ஜநித தரதரள ஹரிஹய நயந நளிநவ நருசிகசித நிபதி தஸுர தருகு ஸுமவிததி ஸுரபித ரதத்த அகில ஜகததிக புஜபலவரபல தசலபநத சகலவ நஜதிதக தநபரவசர ஜநிசர யுவதிவிலப நவச நஸமவிஷய நிகமசிகர நிகரமுக,

ஸுகமுநிவரபரிபணித அபிகத சதமக ஹுதவஹ பித்ருபதி நிருருதி வருணபவநதநதகிரி சப்ரமுக ஸுரபதிநுதிமுதித அமிதமதி விதி விதித அதிதநி ஜவிபவஜலதி ப்ருஷதலவ விகதபய விபுதவிபோதித வீரசயநசாயித வாநரப்ருத நௌக,

ஸ்வஸமயவிகடித ஸுகடித ஹ்ருத ஸஹதர்மசாரிணீக,

விபீஷணவசம் வதீக்ருத லங்கைச்வர்ய,

நிஷ்பந்நக் ருத்ய,

கபுஷ்பிதரிபுபக்ஷ,

புஷ்பகரபஸகதி கோஷ்பதீக்ருத ககநார்ணவ ப்ரதிஜ்ஞார்ணவ தரணக்ருதக்ஷண பரதமநோரத ஸம்ஹிதஸிம்ஹாஸ நாதிருட

ஸ்வாமிந் ராகவ ஸிம்ஹ ஹாடககிரிகடகலடக பாதபீடநிகட தடபரிலுண்டித நிகிலந்ருபதி கிரீடகோடி விவிதமணிகண கிரண நிகர நீராஜித சரண ராஜீவதிவ்ய பௌமாயோத்யாதி தைவத,

பித்ருவத குபித பரசுதரமுநிவிஹித ந்ருப ஹநநகதந பூர்வகால ப்ரபவ சதகுண ப்ரதிஷ்டாபித தார்மிகா ராஜவம்சசு பரத பரதகர்வித கர்வ கந்தர்வ யூதகீத விஜய காடாசதசாஸித மதுஸூதசத்ருக்ந ஸேவித குசலவ பரிக்ருஹீதகுலகாதா விசேஷ விதிவச பரிணமத மரபணிதிக விவரரசித நிஜ சரிதநிபந்தந நிசமந நிர்வ்ருத ஸர்வஜ ந ஸந்மாநித புநருத்தாபித விமாநவர விச்ராண நப்ரீணித வைச்ரவண விச்ராவிதயச: ப்ரபஞ்ச பஞ்சதாபந்ந முநிகுமாரக ஸஞ்சீவ நாம்ருத,

த்ரேதாயுகப்ரவர்த்தித கார்த்தயுக வ்ருத்தாந்த,

கவிகுலபகு ஸுவர்ண ஹயமக ஸஹஸ்ரநிர்வஹண நிர்வர்த்தித நிஜவர்ணாச்ரம தர்ம ஸர்வகர்ம ஸமாராத்ய ஸநாதந தர்ம ஸாகேதந ஜநபத ஜநிக ஜங்கமததிதர ஜந்துஜாத திவ்யகதி தாநதர்சித நித்ய நிஸ்ஸீம வைபவ தநிபவதப நாதாபித பக்தஜந பத்ராராம ஸ்ரீராமபத்ர,

நமஸ்தே புநஸ்தேநம:

சதுர்முகேச்வரமுகை: புத்ரபௌத்ராதிசாலிநே,
நமஸ்ஸீதா ஸமேதாய ராமாய க்ருஹமேதிநே.

கவிகதக ஸிம்ஹ கதிதம் கடோர ஸுகுமாரகும்பகம்பீரம்,
பவபய பேஷ ஜமேதத்படத மஹாவீரவைபவம் ஸுதிய:.

கவிதார்கிக ஸிம்ஹாய
கல்யாணகுணசாலிநே,
ஸ்ரீமதே வேங்கடேசாய
வேதாந்தகுரவே நம:.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
28.	தமிழுரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள்.	சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர்.
29.	திருச்சின்னமாலை.	ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள்.
30.	திருவேங்கடவர்மாலை.	நான்மறையாளர்கள்.
31.	மார்கழி மாலை.	ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள்.
32.	மதுரகவி மாலை.	ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்.
33.	திருவருட்சதக மாலை.	ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
34.	சீரொன்று தூப்புற்றனியன் மாலை.	அருள் வரதரடியார்.
35.	மும்மறைத் தெளிவுப்பொருண் மூதுரை மாலை.	ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயணஸ்வாமி ரெட்டியார் அவர்கள்.
36.	அருளாளர் மாலை.	ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
37.	பூங்கோதை மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராயணய்யங்கார் அவர்கள்.
38.	பூமகள் மாலை.	ஸ்ரீமான் பி. கோபாலாசார்யா அவர்கள்.
39.	இடைப்பிள்ளை மாலை.	ஸ்ரீமான் பி. ஏ. சந்தானமய்யங்கார் அவர்கள்.
40.	செந்தாமரையாள் மாலை.	ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
41.	பெரியபிராட்டியார்·மாலை.	ஸ்ரீமான் ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
42.	தேசிகரந்தாதிமாலை.	ஸ்ரீமான் திருநின்றவூர் பாலவேடு பரவஸ்து நரஸிம்மாசாரியார் அவர்கள்.
43.	இராமாவதாரமாலை.	ஸ்ரீமான் டி. ஸி. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள்.
44.	திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவமாலை.	ஸ்ரீமான் லக்ஷ்மீநரஸிம்ஹ பிள்ளை அவர்கள்.

பெறும் இடம்: ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

5, 7, 8, 10, 15, 16 இலக்கம் உள்ளவை இப்போது கைவசமில்லை.

SA
2-42